



ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
45, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

மாலை 10 | SEPTEMBER 1943 : : சுபானு௵ புரட்டாசி௴ | முத்து 3


# பொருளடக்கம்


| | விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | கூத்தாடி | .... | 'ரஸிகன்' | 66 |
| 2 | அறியாச் செல்வம்—சித்திரசாலை | .... | டாக்டர் வே. ராகவன் | 76 |
| 3 | வேறென்னவேண்டும்? | .... | ல. ரா. விசுவநாத சர்மா | 82 |
| 4 | பரத்பூர் சமஸ்தான கிராம சங்கங்கள் | .... | ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன் | 86 |
| 5 | நாது ஆங்கில இலக்கியம் | .... | வே. ராகவன் | 88 |
| 6 | கட்டி | .... | டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி | 90 |
| 7 | ஆணங்கு | .... | ராமநாத சர்மா | 96 |


"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# கூத்தாடி

"ரஸிகன்"

சோகமே பரமானந்தமாய்ப்படும்படிச் செய்த அந்த கந்தர்வ கானத்தில் ஸங்கல்ப சக்தியையே இழந்தவன்போல் ஸ்தம்பித்திருந்த குஞ்சிதபாதத்திற்கு வெகுநாளைக்குமுன் நடந்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது....

நல்லவேளையாய்க் காயம் வலுவில்லை. ஜனங்கள் தாறுமாறாய்ச் சத்தம்போட்டதைக் கேட்டுக்கிட்ட இருந்தவர்களிடம் "எனக்கு ஒண்ணுமில்லே, ஏன் இப்படிக் கலவரம் பண்ணுறுங்க? ஏதோ தவறுதல் இருக்கிறதுதான்" என்று கூட்டத்தின் கோபத்தை யடக்கும் பொருட்டு ரங்கசாமி சொல்லிக்கொண்டிருக்கையில் சுற்றி நின்றவர்களைக் கையால் விலக்கிக்கொண்டு அலங்கோலமாகத் தலைமயிரவிழ்ந்துவிழக் கோவென்றழுது கொண்டு அதிக வயதாகாத ஒரு ஸ்திரீ சிறுபிள்ளை முந்தானையைப் பற்றிப் பின்தொடர உள்ளே புகுந்து.........

**[வெள்ளைப்பாடி மாரியம்மன்கோவில் திருவிழாக் கூத்துப் பார்க்கவந்த அயலூர் மிராசுதாரர்களாகிய குஞ்சிதபாதமும் கிருஷ்ணய்யரும் கூத்தில் நடக்கப்போகும் பிரபல ஆட்டக்காரனான ரங்கசாமியின் வாழ்க்கை சரித்திரத்தின் விசேஷங்களையும் விபரீதங்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சமீபத்திலுட்கார்ந்திருந்த ஒரு வேளாள ஸ்திரீ பேச்சில் கலந்துகொண்டாள். அவள் ரங்கசாமி விஷயத்தில் காட்டின அக்கறையும் அநுதாபமும் குஞ்சிதத்தின் மனதில் பல எண்ணங்களை எழுப்ப, அவன் மனது ஆட்டத்துவக்கத்தை ஒருபுறம் ஆவலுடன் எதிர்பார்த்தாலும் மற்றொருபுறம் ஆட்டத்துக்குள்ளே இன்னொரு ஆட்டம் நடந்து வருவதை யுணர்ந்து எந்த நிமிஷம் என்ன நேருமோவென்று உஷாராயிற்று]**

நாடகம் ஆரம்பிக்கும் தருணமாதலால் கூட்டத்தில் சத்தமும் நடமாட்டமும் ஜாஸ்தியாக, அவள் மடியில் தலையை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்த பிள்ளை விழித்துக்கொண்டு தூக்கக் கலக்கத்தில் தான் இருக்குமிடம் இன்னதென்று தெரியாமல் 'அம்மா' என்று அழ ஆரம்பித்தது. அவள் சரேலென்று முந்தானையால் கண்ணைத் துடைத்துக்கொண்டு, வலது கையால் குழந்தையை முதுகில் தட்டிக்கொடுத்துக் கம்மின குரலில், "ஏண்டா, கண்ணு, நான் இதோ இருக்கேனே, ஏன் அழுவரே, தூங்கு" என்று ஸமாதானம் பண்ணினாள். அவன் தூங்குவதாயில்லை. நன்றாய்த் தூக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்துகொண்டான். அப்பொழுதுதான் கட்டியக்காரன் (மேற்கூறிய விதூஷகன் தரிக்கும் ஸமயோசிதவேஷங்களில் அதுவுமொன்று. ஹரிச்சந்திரன், சந்திரமதி இந்த இரண்டு 'பார்ட்டு'க்கள் தவிர வேறு எதுவும் போடுவான் என்று பிரஸித்தம். அதுகளையும் போட அவனுக்கு தைரியந்தான், ஆனால் அவனைக் கண்டமாத்திரத்தில் ஜனங்கள் கொல்லென்று சிரிக்க ஆரம்பித்து விடுவது வழக்கமாயிருந்தபடியால் அவன் அந்த மகோன்னதக் கௌரவத்தை யடைய முடியாமல் வருந்தினதாகவும் பிரஸித்தம்) ஜனங்களை எச்சரிக்கை பண்ணும் பொருட்டு ஒட்டடை அடிக்கும் குஞ்சங்கட்டின கப்பு ஒன்றை வெகு கம்பீரமாய் ஆசீக்கோலாய் ஏந்தி, "ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட சூர்ய குல திலக மகாசக்ரவர்த்தி அரிச்சந்திர மகாராஜா பராக்!" என்று கட்டியங் கூற, ராஜா மேடைப் பக்கத்துக் கதவுக்கு வெளியேயிருந்து ராஜநடை போட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தார். மழை பெய்து ஓய்ந்தது போலிருந்த அக்கூட்டத்தில் மறுபடி அரவம் கிளம்பிற்று.

"இது யாரு, அஸல் ராஜபார்ட்டு ஆறுமுக ஆசாரி இல்லியே, வேறு யாரோ பேர்வழின்னா?" என்றார் கிருஷ்ணய்யர் திகைத்து. கூட்டம் முழுவதும் அதே பேச்சுத்தான். ராஜா ஸாவதானமாய் மேடையைக் கடந்து எதிர்ப்புறமுள்ள வாயில் வழியே வெளியேறி விட்டார். உடனே கட்டியக்காரன்

மறுபடி விஜயம் செய்து, "நம்ம அஸல் ராஜபார்ட்டு ஆறுமுக ஆசாரியாருக்கு கொஞ்சம் திரேக அஸௌக்கியம் ஆனபடியாலே கிழக்கத்திச் சீமையிலே பெரியபேர் பெற்ற ஆட்டக்காரர் கண்ணாயிரம் தயவுபண்ணி ராஜபார்ட்டு ஒப்புக்கொண்டாரு. மகாஜனங்கள் உச்சாகம் பண்ணணும்னு வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது!" என்று வெகு இலக்கணமாய்க் கூறி அதற்கு நேர் விரோதமாக ஒரு அந்தரடித்துவிட்டு வெளியே போய்விட்டான்.

பிறகு ஹரிச்சந்திர மகாராஜாவும் பட்டமகிஷி சந்திரமதியுமாகப் பூஞ்சோலையில் உலாவும் காக்ஷி. சோலை பார்ப்பவர் மனக்கண் முன்னே தோன்றியிருக்கவேணும். படுதாவிலோ பக்கவட்டு ஏற்பாடுகளிலோ அதைக் குறிக்கும் யாதொரு அடையாளங்களுமில்லை. அதற்காக மகாஜனங்கள் குறைப்பட்டதாகவும் தெரியவில்லை. அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் கண்களும் சந்திரமதி வேஷம் பூண்ட ரங்கசாமி முகத்தையே நாடி நின்றன. தன்னையறியாமலே குஞ்சிதபாதமும் இவ்விதம் எங்கும் வியாபித்த காந்த சக்தியில் கட்டுண்டு அந்த முகத்தின் பொலிவில் ஈடுபட்டான். ஆண்பிள்ளை பெண்வேஷம் போட்டு இப்படிப் பலிக்குமென்று அவன் அதுவரையில் சொப்பனத்தில்கூட எண்ணினதில்லை. நடையின் மென்மை, பார்வையின் அடக்கம், பிரஸன்ன வதனம், மேல் ஆடையை ஸ்வாபாவிகமான ஜாடையுடன் நுனி விரலால் பற்றி இழுத்து மூடிக்கொள்ளும் நாணம், கள்ளமற்ற கற்புடனிழைந்த அன்பு, இவைகள் பெண்மையே வடிவங்கொண்டாற்போல் விளங்க அதற்குத் தகுந்த ஆகாரம், நடுத்தரமான உயரம், பொன்னிறம் [இது அரிதாரம் பூசாது விடப்பட்டிருந்த பாதங்களை நோக்கின குஞ்சிதத்திற்கு விளங்கிற்று] ஒற்றை நாடியான சரீரம், நீண்டு, நுனி கூர்ந்து தனி உயிர்பெற்று வாழ்வது போன்ற விரல்கள்—அவைகள் வெளிப்படுத்தக் கூடாத ரஸம் இருக்க முடியாதென்றே தோன்றிற்று— விசாலமான கண்கள் இந்திரன் வில்போன்ற புருவங்களுக்கடியில் லாவண்யம் நிறைந்த மடுக்களென ஒளிர்ந்தன. ஆனால் முன்பின் பார்த்திராத குஞ்சிதத்திற்கும் அக்கண்களுக்குச் சகஜமான அமைதி எங்கேயோ போய்விட்டது போலும் அதற்குப் பதிலாய் ஒரு ஆயாஸமும் ஏக்கமுமே நின்றதென்றும் பட்டது.

அவன் மனதிலெழுந்த சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்தினாப் போல் கிருஷ்ணய்யர், "அன்னியிருந்த மேனிக்கு அழிவேயில்லேன்னுதான் சொல்லணும். ஆனாலும் அவ்வளவு உத்ஸாகத்தைக்காணும்" என்று சொல்லிவிட்டு, "ஆமாம், என்னமாயிருக்கும்?" என்று தானே சமாதானமும் சொல்லிக்கொண்டார்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்க, அந்த வேளாள ஸ்திரீயின் சிறு பிள்ளை, "யம்மா, அந்த அம்மா ஆரு? எம்மாம் நகை போட்டிருக்காங்க! பாத்தா நல்ல அம்மாவாட்டமாயிருக்கு" என்று சொல்லி, அவள் பதிலை எதிர்பார்க்காமல் மேலும், "என் அம்மா, அந்த இன்னொத்தரு இருக்காரே, அவராரு? நம்ம நல்லாத்தூர் மாமனாட்டமல்ல இருக்கு!" என்று சொன்னதைக் கேட்டு அவள் திடுக்கிட்டு, ராஜபார்ட்டுப் பேர்வழியைக் கூர்ந்து நோக்கினாள். தாயும் பிள்ளையும் பேசிக்கொண்டதைக் கவனித்த குஞ்சிதத்திற்கு அவள் சற்றுத் திகைப்புடன் அம்மனிதனை உற்று நோக்கியும் அவன் இன்னான் என்று தெளியமுடியாமல் கவனத்தையவள் மறுபடி முழுவதும் ரங்கசாமியிடம் செலுத்தினதும் விளங்கிற்று "சே, சே! அது யாரோ. நல்லாத்தூர் மாமாவுக்கு நாடகம் என்ன தெரியும்? இவரு பேரு வேறெ என்னவோல்ல சொன்னாங்க" என்று குழந்தைக்கு அரைஞாபகமாய்ச் செய்தி சொல்லிவிட்டு, அவனைக் கிட்ட இழுத்துத் தழுவிக்கொண்டு மேடையைக் கண்கொட்டாமல் பார்த்து வந்தாள்.

அன்றைக்கு நாடகம் வெகு அபூர்வமாக அமைந்தது. பிற்காலங்களில் அன்றைதினம் ஏற்பட்ட விசித்திர ஸம்பவங்களைப்பற்றிப் பேசும் போதெல்லாம் "ரங்கசாமிக்கி அது கடைசி நாடகம்னு தான் அது அப்படி விழுந்ததோ என்னவோ! என்ன ஆட்டம் ஆடினான்! என்ன பாட்டுப் பாடினான்! பட்டமரம் பாலா உருகும்னாப்லேதானே யிருந்தது. சாரீரத்திலே என்னிக்குமில்லாத ஒரு தனிக் குழைவு, பாலும் தேனும் சக்கரையும் கலந்தாப்போலே. சோகரஸத்துக்கு எப்படி எடுத்த சாரீரம்! அதுவும் மயான காண்டத்தின் விமரிசையைச் சொல்லி முடி போகாது" என்றெல்லாம் வியந்து வியந்து பேசுவார்கள்.

வாஸ்தவத்தில் ரங்கசாமி அன்றைக்கா வேசம் வந்தவன் போலத்தான் காணப்பட்டான். முதலில் ராஜபார்ட்டு ஆறுமுக ஆசாரி யில்லாமல் வேறு புது ஆள் இருந்தது அவனுக்குக் கொஞ்சம் உறுத்தினாப் போல்தான் இருந்தது. ஆறுமுகம் வெகு நாளாக அவனுடன் சேர்ந்து ஆடி வந்ததினால் 'கொடுத்து வாங்குவதில்' ரொம்ப இங்கிதம் தெரிந்தவன். இந்த மனுஷனோ மேலே படாமல் அகமகிழ்ந்தவன் போல் இருந்தான். இரண்டொரு ஸமயம் ரங்கசாமிக்குத் தன்னிடம் அவன் ஏதோ வேகங் கொண்டிருந்ததாகக் கூடத் தோற்றிற்று. "இவன் யாரு ஆசாமி, எங்கியோ பாத்தாப்பிலேகூட இருக்கு—யாரா யிருந்தா என்ன, வேலைக்காரன்தான், தன்னைக் கட்டிக்கிறான், ஆட்டத்தைக் கெடுக்கல்லெ" என்று அவன் திறமையை மெச்சி, மற்றதை மறந்து தன் ஆட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டான். நாழியாக ஆக அன்றைக்கெல்லாம் 'சோழன் சுத்தினாப் போல்' இருந்த எக்கமும் கலக்கமும் இருந்த விடந் தெரியாமல் ஓடிவிட்டன. மெய்மறந்தும் கதைப்போக்கில் ஈடுபட்டு ஸத்தியத்தை ஸாஹஸத்தால் கைப்பிடிக்கும் ஹரிச்சந்திரனுக்கநுகுணமான பாரியையாய் ஸாத்துவிகத்தையே அநுஸரித்து ஸ்திரிகளுக்குச் சொந்தமான பயமும் பேதைமையும் ஒரு புறமும், விதியின் கொடுமையில் அனல்கண்ட மெழுகெனத் தவிக்கும் தைந்நியமும் அபேத்திய கவசம் போன்ற பாதிவ்ரத்திய கௌரவமும் இன்னொரு புறமும் சேர்ந்து ஒரு அபூர்வமான சிருஷ்டியாய் மாறிநின்றாள். அவன் ஆட்டத்தைக் கண்ட குஞ்சிதபாதம் அவன் எவ்வளவோ பேர்பெற்ற நாடகக்காரர்களைப் பார்த்திருந்தாலும் ரங்கசாமியினிடம் ஒரு தனிப்பட்ட கவர்ச்சியிருப்பதாக ஒப்புக்கொள்ள வேண்டித்தான் இருந்தது.

இந்தக் கலையின் மகிமையை யவன் தன் கண்களைக்கொண்டு மட்டும் காணவில்லை. அவனுக்குப் பின்பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த வேளாள ஸ்த்ரீ, ரங்கசாமி மேடையேறினது முதல் 'மழு மாறினாப்போல்' காணப்பட்டாள். கிருஷ்ணய்யர் ஏதோ காரியமில்லாத கேள்விகள் கேட்டதற்கு அவள் பதில் சொல்லவேயில்லை. அக் கேள்விகள் அவள் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. அவள் பிள்ளை குழந்தைகள் சுபாவத்தை யொட்டி இரண்டு நிமிஷத்திற் கொருதரம் தாயாரை ஏதோ கேட்பதும், அவள் பதில் சொல்லாததால் துணியைப் பிடித்து இழுத்து அவள் கவனத்தைக் கொள்ள வெண்ணுவதுமாய்ச் சேஷ்டை செய்ய அவள் ஊக்கம் வேறுஇடத்தில் செலுத்தியிருந்ததால் 'சும்மாயிரு' என்று பிள்ளையை அதட்டி அவன் அழாவண்ணம் முதுகிலும் தலையிலும் கையால் தடவிக் கொடுத்துக்கொண்டே கவனத்தைச் சிதறவிடாமலிருக்க முயன்றதைப் பார்த்தால் அவள் மேடையில் காணும் காக்ஷி ஒன்றைத் தவிர மற்ற உலகம் முழுவதையும் மறந்திருந்தாப் போலிருந்தது. சந்திரமதியைக் காலகண்டருக்கு அடிமையாய் ராஜா விற்க, புருஷனைப் பிரிந்து அவள் படும் துயரத்தைக் கண்டு அழாதவர்கள் இல்லை; அந்தப் பெண் கண்களில் மட்டும் கண்ணீரைக் காணோம். தாகத்தால் வரண்ட நாக்கு ஒரு வாய் தண்ணீரை என்ன அவா

வுடன் அருந்துமோ அப்பேர்க்கொத்த அவா—உள்ளத்தை வாட்டி வருக்கும் அவா அதுதான் புகைமூண்டாப் போல் காணப்பட்டது. 'கூத்தில் பீத்துக்கட்டி யடிக்கிறது' என்கிற ஸம்பிரதாயப்படி காலகண்டரின் சிஷ்யன்,

"காலகண்டமாமுனிக்குக்
காதுரெண்டய்யா
மூக்கு ரெண்டய்யா—"

என்று விகடம் பண்ணுவதைக் கேட்டு மற்றவர் துக்கத்தை மறந்து 'கொல்' லென்று சிரித்தார்கள். அவள் சட்டை பண்ணினளா? காலகண்டியின் கொடுங் கோலில் சிக்கி, புழுத் துடிப்பதுபோல் துடித்து பூத்தொடுத்த மெல்லிளங் கைகளில் உலக்கை பிடித்து ரத்தங் குழம்ப நெல் குத்தியும், விலைக்கு வாங் கின எஜமானி வேலை செய்யத் தெரிய வில்லையென்று இடிக்கத் தன்நம்பிக்கை யிழந்து நாதனற்றேனென்றெண்ணி யழும் சந்திரமதியின் கோலத்தைக் கண்டு ஒரு பக்கம் துக்கமும் ஒரு பக்கம் சந்தோஷமும் அவள் உள்ளத்தில் கிளம் பிக் கைகலந்து வாதாடினபோல் தோன் றிற்று குஞ்சிதபாதத்திற்கு, அந்த வேளாளஸ்திரீ அடிக்கடி தன் கையைப் பிசைவதும் சிற்றைக் கொருதரம் உள்ளங் கைகளைப் பிரித்துப் பார்ப்பதும், உடனே கண்ணில் இரண்டு துளி நீர் கிளம்பப் புறங்கையால் அதைத் துடைத் துக் கொண்டு அரைச் சிரிப்புச் சிரிப்ப தும் பார்த்தால். லோகிதாக்ஷனை அரவந் தீண்டி அவன் மாய, அந்தக் கொடூரச் செய்தியை அவன் தோழர்கள் ஓடிவந்து சொல்லக்கேட்ட சந்திரமதி நிர்ஜீவை யாய்க் கீழேவிழுந்து கோவென்றுகதறிக் கன்றை யிழந்த தாய்போல் உடம்பு பறக்கத் தர்மபாசத்தால் கட்டுப்பட்டு கல்நெஞ்சம் படைத்த எஜமானி இட்ட வேலைகளை முடித்துப் பிசாசங்கள் கூத் தாடும் கால ராத்திரி இருட்டில் தன்னந் தனியே மரித்த குழந்தையைத் தேடிச் சென்று அவன் பிரேதத்தின்மேல் தடுக்கிவிழுந்து மறுபடி மூர்ச்சையிட்டு ஊழ்வினையின் வலுவால் திரும்பத் தெளிந்து அவனை வாரி மடியில் போட் டுக்கொண்டு கல்லும் கரையப் புலம்பு வதைக்கேட்டு ஆண்பிள்ளைகள் வெட்கம் துறந்து விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டார்கள். அந்தப் பெண்மணியோ பித்துப் பிடித்தவள்போல் காணப்பட் டாள். தன்மடியில் படுத்திருந்த குழந்தை யை அவள் சிற்றைக்கொருதரம் இருகக் கட்டிக்கொண்ட வேகத்தில் கண்ணயர் ந்துவிட்ட அவன் விழித்துக்கொண்டு வலி யால் கத்த ஆரம்பித்துவிட்டான். சற்றுத் திறந்த வாயும், வேகமாயும் உஷ்ணமா யும் கிளம்பும் மூச்சும், கண்களில் பார்ப் பவர் கண்டு திகிலடையும்படியான ஒரு அடங்காத ஒளியும் கைகளை ஊன்றித் தலையை முன் நீட்டி இமைகொட்டாமல் அவள் மேடையை நோக்கும் பார்வை யும் குஞ்சிதத்தின் மனதில் ஏதோ வேதனையையும் பயத்தையும் உண்டு பண்ணினபடியால் அவன் உட்கார்ந்த விடத்தை விட்டு எழுந்தான்.

'எங்கே போறே?' என்று கிருஷ்ண அய்யர் மெதுவாய்க் கேட்க, அவன் வாய்திறந்து பதில் சொல்லாமல் கை யமர்த்தி நிற்கையில் மேடைக்கருகே வைத்திருந்த 'வாஷிங்டன் லைட்' [அது ஆட்டம் ஆரம்பிக்கும் முன்னமேயே தக ராறு பண்ணிற்றென்று சொன்னே மல்லவா] அத்யாவஸ்தை யடைந்து விட்டதைக்கண்டு அவசரமாக எங்கி ருந்தோ இரண்டு **பெட்ரோமாக்ஸ் லைட்டு**களைக் கொண்டுவந்து மேடைக் கிருபுறமும் தொங்க விட்டுவிட்டு **காஸ் லைட்**டைத் தூக்கிக் கிருஷ்ணய்யர் முதலானவர்கள் உட்கார்ந்திருந்த மூலை யில் கொண்டுவந்து நிறுத்தி, 'நிதானமா வாவிடு' என்று அதை சம்போதனம் பண் ணிப் போனான் 'பம்பரமாய்ச் சுற்றும்' விதூஷகன். அது அணையும் விளக்குகளின் தர்மத்தையொட்டிக் குபீலென்று சாதா ரணமாயுள்ள வெளிச்சத்தைப்போல் மூன்றுபங்கு பிரகாசத்தைக் கக்க, கிட்ட இருந்தவர்கள் கண்ணை மூடிக்கொள்ள வேண்டியதாயிற்று.

இந்த சம்பவத்தால் ஆட்டம் சற்றுத் தடைப்பட விளக்கை எடுத்துச்சென்ற

வழியே மேடையில் 'செத்த' குழந்தையை மடியில்போட்டு அழும் கோலத்தோடே யிருந்த ரங்கசாமியின் கண் செல்ல, பளீரென்று கிளம்பின வெளிச்சத்தில் அங்கு எதையோ எதிர்பாராததைக்கண்டவன்போல் கையைத்தூக்கிக் கன்னத்தில் வைத்துக்கொண்டு 'ஆ!' என்று சத்தமில்லாமல் பதைத்து அவ்விடமே நோக்கியவண்ணம் அசைவற்றிருந்தான். சொப்புக்குள் சொப்பென நாடகத்திற்குள் நாடகம்போல் நடந்த இச் சம்பவத்தைக் குஞ்சிதம் ஒருவனே கவனித்தான். அது காரணம்தான் போலும், மறுபடிக் கீழே உட்காராமல் கூட்டத்திற்கு வெளியே சென்று ஒருவரும் பார்க்காதபடி பேடைப் பக்கவட்டு அடைப்பு நிழலில் வந்து நின்றுகொண்டு மேல் நடக்கப் போகும் விஷயங்களை ஊக்கமாய்த் தொடரத் தலைப்பட்டான்.

ரங்கசாமி அதுவரையில் நடித்த நடிப்பு ஒருதினுசு. அதற்கப்புறம் சுமார் ஒருமணி சாவகாசம் அவன் ஆடின ஆட்டத்தை அனுபவித்த குஞ்சிதபாதம் 'இனி வேறொருவன் இப்படி ஆடவும் முடியாது. இதுவரையிலும் இவனே இப்படி ஆடியிருக்கவும் முடியாது' என்று துணிந்தான். மடியில் செத்தது போல் கிடக்கும் குழந்தையைப்பார்த்து நாடோடியான ஹரிச்சந்திர நாடகக் கீர்த்தனைகளில் புலம்பலுக்கென்று ஏற்பட்ட பகுதிகளைப் பாடி வந்தான் என்றாலும், சந்திரமதி லோகிதாஸனைக் குறித்துப் புலம்புவதாகவோ யாரோ ஒரு தாய் ஒரு மகனையிழந்து அழுவதாகவோ அக்காட்சி தோற்றவில்லை. உலகம் ஏற்பட்ட நாளாக அல்பாயுசான பிள்ளைகளை நினைந்து எவ்வளவு கோடிக் கணக்கான தாய் வயிறுகள் கொதித்தனவோ அவ்வளவும் ஒருமித்து அநாதியாய் விளங்கும் ஜீவதந்துவே உருகித் தண்ணியாய் ஓடும்படி சோகித்தன்போலிருந்தது ரங்கசாமியின் முகாரி. கரைகடந்த வெள்ளமாய்க் கிளம்பி ஒருங்கே கிடந்தும் பற்றற்று நிற்கும் மணல் திவலைகள்போன்ற மாந்தர்களை மூழ்கடித்துத் தற்சமயம் ஏக சித்தர்களாக்கியது.

சோகமே பரமானந்தமாய்ப்படும்படிச் செய்த அந்த கந்தர்வ கானத்தில் ஸங்கல்ப சக்தியையே யிழந்தவன்போல் ஸ்தம்பித்திருந்த குஞ்சிதபாதத்திற்கு வெகுநாளைக்கு முன் நடந்த ஒரு சம்பவம் ஞாபகம் வந்தது அவனுக்குப் பத்து வயதிருக்கும். கும்பகோணத்தில் படித்துவந்தான். ஒரு நாள் (முன்னிருட்டுக்காலம்) விளக்கு வைத்தாய்விட்டது, பழைய காவிரிப் பாலத்தின் வழியாய் அவசரமாய் வடக்கே யிருந்து வீடு திரும்பி வந்துகொண்டிருந்தான். நாழியாகிவிட்டபடியால் வீட்டிலுள்ள பெரியோர்கள் கோபிப்பார்களே யென்ற பயம் ஒருபக்கம். அக்காலத்தில் சக்கரப் படித்துறை என்று பிரஸித்திபெற்ற அவ்வூர் மயானத்திற்கு அந்தப்பாலம் வழியாகத்தான் போகவேண்டி யிருந்தபடியால் அடிக்கடி அங்கே பிணம் போவதைக் காணலாம். இது குஞ்சிதபாதத்திற்கு நன்றாய்த் தெரியுமாதலால் நீராப்பொறியாய் அப்பாலம் வழியாய்ச் செல்ல நேர்ந்தால் பிண மென்றால் அரை மைலுக்கப்பால்ஓடும்சுபாவமுள்ள அவன் பாலத்தில் கைப்பிடிச் சுவற்றின் ஓரமாயுள்ள உயர்த்திய நடையில் ஓட்டோட்டமாயோடி வெளிப்போந்து திரும்பிப் பார்க்காமலே நடப்பது வழக்கம். அவ்விதமே அன்றைக்கும் போய்க்கொண்டிருக்கையில் திடீரென்று தனக்கு வலது கைப் புறத்தில் பாலத்திற்கும் படித்துறைக்கும் நடுவே ஆற்றுமணலிலிருந்து "ஐயோ ராஜா! நான் என்னடா பண்ணுவேன்! என்னெ துடிக்கவிட்டுட்டுப் போயிட்டியேடா! ராமா! ராமா! என் தானந் தரமான கொழந்தைபோய்க் குட்டிச் செவராட்டமா நான் இருக்கணமா!" என்று கிழக்குரலில் ஹோவென்று கதறியலறும் சத்தம்கேட்டுத் தன்னை யறியாமலே கால் கை விலவிலக்க குஞ்சிதம் அப்படியே நின்றுவிட்டான். அந்தக் கிழத்தாயின் வயிறு குமுறிக் கிளம்பும் ஓலம் அண்டாண்டங்களைப் பேதித்துச் சிருஷ்டி கர்த்தாவின் ஸிம்மாஸனத்தையே பிடித்து ஆட்டினதுபோலிருந்தது அவன் குழந்தை யுள்ளத்திற்கு. மலைச்சரிவில் பொங்கி வழிந்து பாயும்

சுனையின் ஓரத்தில் போகும் ஒற்றையடிப்பாதையில் கோலூன்றி நடக்கும் அந்தகன் கைக்கோலை விஷமத்திற்காக ஒரு பாபி பிடுங்கிவிட்டால் அவன் என்ன திகைப்பும் துக்கமும் கசப்பும் அடைவானோ அவ்விதம் அக்கிழவி தன் பிள்ளையைப் பறிகொடுத்து "ஐயோ! கண்காணாச் சீமையிலே நீ ப்ராணனை விடணுமா என்னைப் பறக்கவிட்டுட்டு, ராமா! ராமா! நான் என்ன பாவத்தைப் பண்ணினேன் இப்படிப் புழுத் துடிக்கிறாப்பிலே துடிக்கிறத்துக்கு!" என்று ஓலமிடுவதைக் கேட்டு, ஊரோசை அடங்கின அந்தவேளையில் வரண்டு நீரற்று இருட்டில் எலும்புக் குவியல் போன்று தோற்றும் மணற்பரப்பில் அழுவது யார் என்று பார்க்கமுடியாமல் போனாலும் நெம்பித்த அக் கிழக்குரல் ஆகாசத்தில் மத்தாப்பூக் கொளுத்தினாப்போல் வாரியிறைக்கப்பட்டிருந்த நக்ஷத்திர மண்டலத்தைத் தாக்கி அதன் பொலிவை மங்கச்செய்வதாயுணர்ந்த குஞ்சிதம் எவ்வளவு நாழி யங்கே நின்றானென்பது அவனுக்கே தெரியாது. சிற்றைக் கொருதரம் 'ராமா!' 'ராமா!' என்று ஏங்கித் தயங்கி ஓய்ந்து கரைந்துருகும் அன்னையின் ஆர்த்தஸ்வரம்தான் அவன் உள்ளத்தில் வியாபித்திருந்தது. இப்படியிருக்க அழும் தாயைத் தேடிவந்து தேற்றி வீட்டுக்கழைத்துப் போகும் எண்ணத்தோடு, "அம்மா, வீணா அலறி என்னப்ரயோஜனம்? போன உசிரு வரப்போறதா?" என்று சொல்லும் ஒரு ஸ்திரீயின் வார்த்தைகள் காதில் விழத் தன் நினைவடைந்த குஞ்சிதம் மறுபடி "ராமா! ராமா!" என்று கிழவி முனகுவதையும், "ராமன் அழைச்சுண்டுடுவர் மச்சினனே, நல்ல பூஜெயெப் பண்ணித்தானே கங்கெக்கரேலே சாவு கெடச்சுது. வயசுகாலத்திலே ஒங்களைக் கஷ்டப்பட விட்டுட்டுப் போயிட்டாரேங்கரதே யொழிய, அவருக்கென்ன, மகாராஜாவாய் போய்ட்டார்" என்று அவள் நாட்டுப்பெண் ஆறுதல் சொல்வதையும், கேட்டதின் பலனாக, ஆயிரம் பாம்பிற்கு நடுவே ஒரு தவளை யென்றாப் போல் எங்கேபார்த்தாலும் காலன் தாண்டவமாடியும் உயிரிலுள்ள பற்றால் எந்தத் துக்கத்திலும் மூழ்கி மூழ்கிக் கிளம்பும் மனிதன் மனோசக்தியை அவ்வளவு இளமைப் பருவத்திலேயே அவன் உணரலானான். இச்சம்பவத்தை ரங்கசாமியின் ஆட்டம் அவனுக்கு ஞாபகப்படுத்தவே அந்த ஆற்றமுடியாத துக்கத்திற்கும் சந்திரமதியின் துயரத்திற்கும் ஒரு ஆச்சரியமான வித்தியாசம் கண்டான். மகாப்பிரளயத்தில் பிரபஞ்சம் சிதறி யழியச்செய்யும் உடுக்கையின் உக்ர ஒலிபோன்று உடலின் எண்பத்து நாலாயிரம் நரம்புகளையும் பேதிக்கும் துக்கம் அது; அழிந்த பிரபஞ்சத்திற்குப் புத்துயிர் கொடுத்துத் தன் அழிவற்ற லீலாவிபூதிகளைக்கொண்டு ஜீவன்களைக் களிக்கச்செய்யும் 'கவி: புராண:' என்று சொல்லப்பட்ட ஆனந்தக் கூத்தனின் சிலம்பொலியை அந்தரங்கக் காதுகேட்டுக் குளிரச்செய்யும் இந்த நாதவெள்ளத்தில் மரணமாம் தெப்பக்கட்டை பற்றி மிதந்து நாதன் திருவடியடைவோமென்ற சித்தாந்தத்தை வளர்க்கும் துயரமிது. இதைத் தன் ஹிருதயபக்குவத்தால் உணர்ந்தல்லவோ வியாஸபகவான், காசிராஜாவின் பிள்ளையைக் கொன்றதாக அபவாதம் சுமற்றப்பட்டுத் தன் பிள்ளையை இழந்த துக்கத்தைப் பதின்மடங்காக்கின இக்கொடூர சம்பவத்தையும் பொறுத்து, மரணதண்டனைக்காளாகி, மயானத்தில் காவலாளான பறையன் கைவாளுக்கிறையாகச் சித்தமாயிருக்கும் தருணத்திலும் தன் கஷ்டங்களுக்கெல்லாம் மூலகாரணமான தன் கணவனுடைய ஸத்திய புத்தியைச் சிரமேற்கொண்டு, "ஆயிரம் ஜென்மம் நானெடுத்தாலும் ஹரிச்சந்திர மஹாராஜாவுக்கே பத்தினியாய்ப் பிறக்கவேண்டும், இது தவிர வேறு சொர்க்கம் வேண்டேன், சுகம் வேண்டேன்" என்ற ஊர்ஜிதத்தை நாடினாள் சந்திரமதி என்று அப் பதிவிரதையின் தீவிரத்தை வியந்து பாராட்டியிருக்கிறார்.

நாடகத்தில் அந்த கட்டம் துவக்கமானதுதான் குஞ்சிதத்திற்கு அதைப் பற்றிச் சிந்திக்க ஆஸ்பதமாயிருந்தது.

ஆனால் அவன் கூட்டத்தின் கோடியிலிருந்து எழுந்து மேடை யருகாமையில் வந்து நின்றதுமுதல் ஆட்டத்தில் அளவற்ற ஆனந்தத்தை யடைந்துவந்தானென்றாலும், அவன் மனதில் ஒரு பாகம்தான் அதில் ஆக்கமாயிருந்தது. வெகு விழிப்பான இன்னொரு பகுதி, ஆட்டத்திற்குள் ஆட்டம் ஒன்று நடந்து வருகிறதென்ற நிஷ்கர்ஷை அவன் மனத்தில் பலப்பட பலப்பட அதிலேயே நாடி நின்றது. ராஜா வேஷம் போட்ட கண்ணையிரத்தைக் கண்ட மாத்திரத்திலேயே "இதிலே ஏதோ சூது இருக்கு!" என்று தன் மனதில் அழுத்தமாய் ஊன்றின சங்கையால் அவன் செய்கைகளிலும் ஜாடைகளிலும் கருடனைக் கண்ட பாம்பு மயங்கி நிற்பது போன்று ஒரு பயங்கலந்த ஜாக்கிரதையுடன் குஞ்சிதம் முழுகவனத்தையும் செலுத்தி வந்தான். ஆட்ட ஆரம்பத்தில் தனக்குப் பின் உட்கார்ந்திருந்த வேளாள ஸ்திரீக்கு இதில் ஏதோ தவிர்க்க முடியாத ஸம்பந்த மிருப்பதாகவும் அவனுக்குக் கண்டிப்பாய்ப்பட்டது. அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பயமென்றபடி கண்ணையிரம், ரங்கசாமி இருவரும் சிற்றைக்கொருதரம் அந்த ஸ்திரீ இருந்த பக்கம் திரும்பி அரைக்கணம் உற்று நோக்குவதும் உடனே அப்புறம் பார்த்தாலும் அந்தப்பார்வையில் ஒரு தனிப்பட்டவேகம்காணுவதுமாக அவனுக்குத் தோற்றிற்று. அதோடுமட்டுமல்ல. ஆட்டம் ஆரம்பித்துக் கொஞ்சநாழிகையானவுடன் ரங்கசாமி இவ்வுலகப்பிரக்கினையே இழந்தவன்போல் 'ராஜபார்ட்டுக் கண்ணையிரமும் சரிதான் மேடைப் பக்கவட்டு அடைப்படைத்த மூங்கிற் கொம்பும் சரிதான்' என்னும் ரீதியில் அவனை முற்றிலும் மறந்த்வன்போல் காணப்பட்டான். கண்ணையிரமோ ஆட்டத்தில்கவனத்தைச் சிதறவிடாமல் ஆடிவந்தாலும் திடீர் திடீரென்று தலையைக் குனிந்து கீழ்ப் பார்வையாய் ரங்கசாமி முகத்தைக் கடிந்து பார்க்கும் பார்வையில் மனதைக் கலக்கக்கூடிய வெறுப்பும் அசூயையும் ஆத்திரமும் கொந்தளிப்பதாகக் குஞ்சித பாதத்திற்குப்பட, "சே! நாடகம்பார்த்த பலன் **இமாஜிநேஷன்** ரொம்ப வலுத்துவிட்டதே!" என்று தன்னைத் தானே பரிஹசித்துக் கொண்டாலும், காரியத்தில் கண்ணாகவே யிருந்து வந்தான்.

ஆகாயப்பந்தல் போடும் தன் மனதின் கேளிக்கையல்ல, உள்ளபடியே ஏதோ ஒரு விபரீதச் சம்பவத்திற்குக் காலம் குமுறிக்கொண்டு நிற்கிறது, எந்தநிமிஷமும் வெடிக்கலாமென்று அவன் உஷாராய் நிற்கையில் விதூஷகன் மயானத்தில் சந்திரமதியைச் சிரச்சேதம் பண்ண ஆயத்தமான ராஜாவினிடம் கொடுக்க உரையோடுகூடின கொலைவாளைத் தூக்கிக்கொண்டு மேடையில் நுழையும்போது, "ஏ, அம்மாடி, எம் மாங்கனங் கனக்குது! இது நம்ப வெண்ணெவெட்டற பூசரங்கழிப் பட்டாக்கத்தி யில்லெப் போலிருக்குதே!" என்று சொல்லுவதும், அவனுக்கொத்தாசையாய்க் கிழக்கும் மேற்கும் ஓடிக்கொண்டிருந்தஆள், "இல்லேஅய்யா, ராசபார்ட்டுத் தன் கையிலே கொணாந்தாரு, கொணாந்து எங்கிட்டக்குடுத்து இதெ, சாக்கிருதையா வெச்சிக்கிட்டிரு, சடேசிலே வேண்டிருக்கு' முன்னாரு. "எதுக்குங்க, நம்மகிட்டே கொலெவாளெல்லாம் இருக்குதே'ன்னேன். அதுக்கவரு ஒரு சிரிப்பு சிரிச்சிக்கிட்டு—ஏதோ ஒரு மாதிரியான அசாமியாயிருக்காரு அவரு—'ஒங்க வாளெல்லாம் கொலெ பண்ணுதா, அது நமக்கு சரிப்படாது'ன்னு எம்முதுவுலே தட்டிக்குடுத்துட்டுப் பூட்டாரு" என்றான். "அது என்ன எழவாவது போவுது, நமக்கென்ன?" என்று பதில் சொல்லிவிட்டு, தனக்குத்தானே சொல்லிக்கொள்பவன்போல, "மின்னெ பின்னெ தெரியாத ஆளெ ஆட்டத்திலே சேக்கப்படாதுன்னுசொன்னேன்; இந்த நாட்டாமெக்காரரு ஒரு அகம் புடிச்ச ஆளு, அவர் புடிச்ச மொசலுக்கு மூணுகால்தான். 'ஏ, ஒனக்கென்ன தெரியும், அவர் ஸர்டிபிகேட், மெடல்லாம் பாத்தேன், ரொம்பப் பெரிய ஆட்டக்காரருன்னு பேரு வாங்கிருக்காரு கெழக்கத்தி நெட்டுங்கள்ளே,

இந்த ஊரு சனங்க பாக்கக் குடுத்து வைக்கலையே, ஆறுமுகம் இருக்கவேயிருக்கான்'னு அதட்டிப் பேசிப்புட்டாரு. ரங்கசாமியும் இதைக் காதிலே போட்டுக்கவேயில்லே. என்னவோ ர சொப்பனங்கண்டவன் போலே யிருந்தான், "நாமென்ன பண்ணலாம்?" என்று முணுமுணுத்துக்கொண்டே மேடையை யடைந்து வாளைக் கண்ணாயிரத்தின் கையில் கொடுத்தான். இந்த சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த குஞ்சிதபாதத்திற்கு மனதில் திகில் உண்டாயிற்று. மேடையை ஒட்டினாற்போல் நகர்ந்து வந்து அந்த சமயம் எது நடந்தாலும் ஒரு கை பார்த்துவிடுவது என்று சித்தமா யிருந்தான்.

வீரபாகுவின் ஏவலாளுக்கும் அபாண்டமாய்க் குற்றம் சுமத்தப்பட்ட மாதரசிக்கும் தர்க்கம் முடிவடைந்து விட்டது. 'உன் இஷ்ட தேவதையைப் பிரார்த்தித்துக் கொள்ளலாம்' என்று அவன் சொல்ல, ஸர்வேசுரனின் திருவருளைத் தாகமாய் நாடித் தன்னைப் பிழந்து பதியையே தெய்வமாய்க் கொண்ட அவள் ஹரிச்சந்திரன் எங்கிருந்தாலும் அவன் தொடர்பு தன்னை விடாதென்று பரிபூரண நம்பிக்கை கொண்டு முகமலர்ந்து உயிரைவிடச் சித்தமாகி முழந்தாளை நிலத்திலூன்றித் தலைகுனிந்து வாளின் வீச்சை மாலையின் தழுவுதல்போல் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கையில் 'கொலையாளி' ஏதோ விகாரமாய் உறுமுவது போன்று பெருமூச்சுவிடுவதையும் அவன் கால்கள் காரணமில்லாமல் கிடுகிடு என்று ஆடுவதையும் மரத்தில் இரும்பு பட்டாற்போல் ஒரு சத்தம் எழுந்ததையும் கவனத்தில் வாங்கித் திடீரென்று ரங்கசாமி தலையைநிமிர்ந்தானோ பிழைத்தான். அந்தக்ஷணம் விளக்கு வெளிச்சத்தில் பளீரென்று மின்னும் பட்டாக்கத்தி கண்ணாயிரத்தின் இரண்டு கைகளாலும் பற்றப்பட்டு வெகு வேகமாய்க் காலசர்ப்பம்போல் தன் கழுத்தைநோக்கிப் பாய்வதைக்கண்டு கண்ணிமை மூடும் தருணத்தில் தலையை அப்புறம் இழுத்துக்கொண்டான். தலை இவ்விதம் தப்பக் கத்தி அவன் வலது துடையில் விழுந்தது. அது இறங்கின வேகத்தில் கொன்றேயிருக்கு மென்றெண்ணின ஜனங்கள் 'ஹா ஹா' என்று சத்தம் போட்டுக்கொண்டெழ, "ஐயோ, பாவி! கொன்னு போட்டானே!" என்றலறும் பெண் குரல், கூடியிருந்த ஆயிரக்கணக்கான பேருள்ளங்களைக் கலக்கியது. ரங்கசாமி பின்பக்கம் கைகளை யூன்றியபடியே பிரமித்துப்போய்ச் சாய்ந்து விட்டான். கண்ணாயிரம் இருகைகளும் கத்தியைப் பிடித்தவண்ணம் பொம்மைபோல் நின்றான். அவன் மணிக்கட்டுகளை இரும்புப் பிடியாய்ப் பிடித்து முறுக்கி யிழுத்து அம்மியிருந்த குஞ்சிதபாதத்தைப் பஞ்சடைந்த கண்களால் பித்துப்பிடித்தவன் போலே பார்த்துக்கொண்டு. ரங்கசாமி யணிந்திருந்த முரட்டுக் கருப்பு ஒட்டுச் சல்லடத்தின்மேலே செம்பட்டுக் கயிறு கிடந்தாற்போல் ரத்தம் ஒரு கோடாய்க் கிளம்பி வந்துகொண்டிருந்தது. நாலா பக்கமும் ஜனங்கள் மேடையைச் சூழ்ந்துகொண்டு 'அட கொலகாரா! இவன் எங்கேருந்துடா வந்தான் எமன் போல! அடிடா, வெட்டுடா, குத்துடா!" என்று ஆரவாரித்துக்கொண்டு கண்ணாயிரத்தைச் சிதல் சிதலாய்ப் பிய்த்துவிடுவார்கள்போல் இருந்தது. நாட்டாண்மைக்காரன் பத்து முண்டு ஆள்களை மேடையைச் சுற்றிக் கையைக் கோர்த்துக் கொண்டு நிற்கச்செய்தானே கண்ணாயிரம் தப்பினானே.

நல்லவேளையாய்க் காயம் வலுவில்லை. ஜனங்கள் தாறுமாறாய்ச் சத்தம்போட்டதைக்கேட்டுக் கிட்ட யிருந்தவர்களிடம் "எனக்கு ஒண்ணுமில்லெ, ஏன் இப்படிக்கலவரம் பண்ணுறீங்க! ஏதோ கைத்தவறுதல் இருக்கிறதுதான்" என்று கூட்டத்தின் கோபத்தை யடக்கும் பொருட்டு ரங்கசாமி சொல்லிக்கொண்டிருக்கையில் சுற்றி நின்றவர்களைக் கையால் விலக்கிக்கொண்டு, அலங்கோலமாய்த் தலைமயிரவிழ்ந்துவிழக் கோவென்றழுதுகொண்டு அதிக வயதாகாத ஒரு

ஸ்திரீ, சிறுபிள்ளை முந்தாணையைப் பற்றிப் பின்தொடர உள்ளே புகுந்து அசைவற்றுநிற்கும் கண்ணாயிரத்தைப்பார்த்து "எங்கழுத்திலே ஒரு நூலிருக்கிறது ஒனக்காகல்லியா? வேறெல்லாந்தான் போச்சே! சத்திரெழுந்து பவுஷெழுந்து ஊரார் கண்ணுமுன்னே நாப்புக்கெடமா நிக்கறேனே! எத்தனெ நாளா இந்தக் கெட்ட எண்ணம் எண்ணிக்கிட்டிருந்தே? இதுக்குத்தானா 'எங்கத்தெமவ, எங்கத்தெமவ'ன்னு ஒறவுகொண்டாடினே! கட்டின புருசென நாம் பண்ணின பாவம் வீட்டெவுட்டு வெரட்ட, வயத்திலேபொறந்த தோசத்துக்காகக்கட்டிக் காத்திருந்த தோப்பன் சாவ, 'எங்கருடா'ன்னு கேக்கறத்துக்கு ஆளில்லாமெ புள்ளெயெ வெச்சுக்கிட்டுத் தவிச்ச அப்போ நமக்கும் ஒரு கரிசனமான மனுசா, இருக்காங்கன்னு எண்ணும்படி 'நான்'னு வந்து, கூப்பிட்ட கொரலுக்கு என்னு கேட்டுக்கிட்டு இந்தப்பாழ மனசு நொந்தவேளேலே ஏதோ ஆறுதல் சொல்லிக்கிட்டு இருந்தியேன்னல்ல ஒன்னெ நம்பிப்புட்டேன். அப்பவே ஊர்லே எல்லாரும் சொன்னாங்க, 'என்டி வள்ளி, மாமன் மவனுங்கிறியே, இவருக்கு நாப்பது வயசிருக்கும் போலிருக்கு. இதுக்கு முன்னமே இப்படி ஒத்தரிருக்காருன்னே தெரியாதே நமக்கு, எங்கியோ கெழக்கு சீமேலே செறுபுள்ளேயாயிருக்கறப்போ ஓடிப்பூட்டாராம், சொத்து சொதந்தரம் சம்பாரிச்சிருக்காருன்னு சொல்லிக்கிறாங்களே, இதெல்லாம் நெசமாயிருக்குமா? நம்பிக்கையாப் பழவுறயே"ன்னு சொன்னத்துக்கு 'அதுக்கென்ன, சின்னப்புள்ளெயாயிருக்கிறப்போ தப்புப்பண்ணிபுடறதுதான். அவரு கப்பல் வியாபாரம்பண்ணி நாலுகாசு சம்பாரிச்சுக்கிட்டு, கண்ணாலம் கின்னாலம் பண்ணிக்காத்தினாலே ஊருக்குப் போய்வரலாமுன்னு வந்திருக்காரு'ன்னு உள்ளபடி நான் எண்ணிச்சொன்னேன். ஒன் சூது எனக்கு வெளங்கல்லியே. நீ ஒரு ஆட்டக்காரன், அதிலியும் கைதேர்ந்தவன்னு இப்பொன்னா தெரிஞ்சுது, இந்த அரிதாரம் பூசிருக்கா மெம்மெரிசேலே எனக்கு அடையாளங்கூடத் தெரியல்லியே! இந்தப்புள்ளே கேட்டுது ஆட்டம் ஆரம்பிச்ச ஒடனே, 'யம்மா' நம்ம நல்லாத்தார் மாமனாட்டமால்ல இருக்கு'ன்னு, நான் ஏதோ பேத்தறான்னு அதட்டிப்புட்டேன். இப்பொ வெளங்குது கெழக்கு நாட்டுலே அவரு அத்தெப் பண்ணாரு இத்தெப்பண்ணாரு, அவளோடே இப்படி இப்படி இருந்தாருன்னெல்லாம் யாத்தாப்பிலே அடிக்கிறியேன்னு எண்ணிக்கிட்டிருந்தேன், பாம்புங்கால் பாம்புக்குத்தானே தெரியும்."

இந்த ஆத்திரவார்த்தைகளைக் கேட்டு எல்லோரும் பிரமித்து நிற்க, ரங்கசாமி ஒரு அரைச்சிரிப்புச் சிரித்துக்கொண்டு "ஒரு கூத்தாடி தொலைஞ்சானா இன்னொரு கூத்தாடியா வரணும்!" என்று விஷமமாய்ச் சொல்ல, அதுவரையில் வாயைமூடியிருந்த 'கண்ணாயிரம்' வெகு அலக்ஷியமாய் 'கூத்தாடினைக் கூத்தாடியாயிடமாட்டாங்க, தட்டுக்கிட்ட கழுதெக பின்னேடே வாலெக்கொழைச்சுக்கிட்டு நான் ஓடல்லே!" என்று சொல்லிவிட்டு வள்ளியைப் பார்த்து, "வெள்ளாழன் வீட்டுப் பொண்ணல்ல! ஆம்படையான் அவிசாரிக் கள்ளனை அவனெக் கண்ணெடுத்துப்பாக்கலாமா? சீ! ஒன் செய்மத்தெச்சுட! இன்னிக்கிவனெ ஒழிச்சுப்புட்டு ஒனக்கு விடுதலெ பண்ணலாமுன்னு எண்ணினேன். சாக்கடெப்புழுவுக்கு சாக்கடெதானே சொர்க்கம்!" என்று வீராப்பாய்ப் பேசினதுகேட்டு அதுவரையில் பேசாமலிருந்த குஞ்சிதபாதம் "அடே, நீ ஒரு ஆட்டக்காரனுன்னுபாத்தேன் பொம்பிள்ளே மனசெக் கண்டுபிடிக்கத் தெரியாத நீ ஒரு ஆட்டக்காரனா! ஆயிரம் மனஸ்தாபம் இருக்கட்டும், ஒருதரம் புருஷனை அடைஞ்ச பொம்மனாட்டி வேறெ எதையாவது மதிப்பாளா? இல்லெ, அவனுக்கொரு கெடுதல் ஏற்பட்டாப் பொறுப்பாளா?" என்று அதட்ட கண்ணாயிரம் தலையைத் தொங்கவிட்டான். வள்ளி முகத்தை முந்தாணையில் மூடிக்கொண்டு அழுதாள் ரங்கசாமி இரண்டு கண்களிலும் நல்முத்துப்

போன்ற இரண்டு நீர்த்திவலைகள் எட்டிப்பார்க்க, "ஐயாவெத் தெரியல்லே எனக்கு. எதோ பெரியவங்க பண்ணின புண்ணியம் ஒங்களெ மாரியம்மன்தான் இங்கே கொணாந்து சேத்தா. எனக்கு உசிரெக் கொடுத்தது பெரிசல்ல, இந்த சாதுவுக்கு என்னாலே நேந்த தும்ப மெல்லாம் போதாதுன்னு இதுவேறெ துக்கமும் அவப்பேருமில்லாமெக்காப் பத்தினீங்களே, ஒங்களுக்கு நான் என்ன செய்யப்போறேன்," என்று குழைந்து கூறுவதைக் கேட்டு விதூஷகன் நாடகத்தைப் பூர்த்தி பண்ண எண்ணினவன் போல், "தம்பீ, என்ன பண்ணப் போறேன்னு கேக்கிறியே, வருசந் தவறாமெ மறுமாயி சந்நதிலே நீ ஆடவேண்டியது, அய்யா வந்து கண்டு களிக்கவேண்டியது, நாம (மாரை தட்டிக்கொண்டு) இங்கே விஜயம் செய்யும் கனதனவான்கள் தயவுலே ஸரிகை துப்பட்டாக்கள் வெகுமானம் பெத்து ஐம்முனு போட்டுக்கொள்ள வேண்டியது" என்று வேடிக்கையாய்ச் சொல்லி, பின்னும் அம்மன் கோவிலிற் றிருந்தவளை நோக்கி ஆவேசம் வந்தவன் போல், "தப்பீ, ஒன்னெப் புடிச்ச சனி விட்டுப்போச்சு போ. அவளெ மறந்திருந்தே, கண்ணெளந்தே, திரும்பக் கண் கொடுத்துட்டா, கருணைக் கடலில்லியா, பராசக்தி, லோகமாதா!" என்று கம்பீரமாய்க் கூறினான். அச்சிறு கூட்டத்தில் மௌனம் குடிகொண்டது. குஞ்சிதபாதத்தின் உள்ளத்தில் என்றுமில்லா ஆனந்தம் நிலவியது.

---

மூட நம்பிக்கை பிறக்கிறதே, அஃது அடிமைத்தனத்தின் குழந்தை. சுயமாகச் சிந்தனை செய்தால்தான் நமக்கு உண்மை புலப்படும். எல்லாரும் சுயமாக எண்ணவும், எண்ணியதை வெளியிலே சொல்லவும் உரிமை பெற்றுவிடுவார்களேயானால் ஒவ்வொருவருடைய மூளையிலிருந்தும் சிறந்த கருத்துக்கள் தாமே வெளியாகும். அப்பொழுது உலகத்தில் ஞான பொக்கிஷம் நிரம்பியிருக்கும்

∴ ∴ ∴ ∴

நாகரிகம், சுதந்திரம், நீதி, தருமம், அறிவு அபிவிருத்தி முதலியனவெல்லாம், மிதந்து செல்கிற பனிக்கட்டிகளிலிருந்து மலர்ந்த மலர்கள்.

செழுமை நிறைந்த கணவாய்ப் பிரதேசங்களிலும், மலைப் பிராந்தியங்களிலும் செடி கொடிகள் எப்படி உற்பத்தியாகின்றன வென்பதைப் பாருங்கள். கணவாய்ப் பிரதேசங்களிலும், உயர்ந்தனவும் கனிதருவனவுமான விருட்சங்கள் உண்டாகின்றன. ஆனால் உயர, உயர மலைச்சிகரங்களில் புதர்கள்தான் காணப்படுகின்றன. இவை எதைக்காட்டுகின்றன? சரியான மண்ணும் சீதோஷ்ணமும் தேவையென்பதைக்காட்டுகின்றன. இப்படியே, அறிஞர்கள் உற்பத்தியாவதற்குச் சரியான மண்ணும் சீதோஷ்ணமும் தேவை.

—"மானிட ஜாதியின் சுதந்திரம்" (சக்தி மலர்)

# அழியாச்செல்வம்

## சித்திர சாலை

**டாக்டர் வே. ராகவன்**

பரம்பொருள் என்பது அழகின் வடிவம்; அழகே உருவானது. அழகையே நாம் கண்டு கண்டு அதனையே மனத்தால் உண்டு உண்டு நாம் உழலும் உலகவாழ்க்கையின் அழகின்மையைக் கடந்துவிடலாமென்ற அழகு வழிபாட்டை நம் முன்னோர் கலை வாயிலாகவும், சிற்ப வாயிலாகவும் கையாண்டனர். இவ்வுலகிலேயே நம் நாட்டில் இருப்பதுபோல் வேறெந்த நாட்டிலும் ஒரு நாட்டினர் 'தாம் செய்தது,என்று சொல்லிக்காண்பிக்கக்கூடிய சிற்பங்கள் இவ்வளவு அதிகமாகக்கிடையாது.

லங்கையில் ஸிகிரியா என்ற ஸிம்மகிரியின் உச்சியில் ஏறிப்போகமுடியாத இடத்தில் கி. பி. 7-வது நூற்றாண்டில் கச்யபன் என்ற அரசன் பதுங்கிக் கிடக்கும்போது எடுக்கப்பட்ட அற்புதமான ஓவியங்கள் இருக்கின்றன. இங்கு 21 பொன் உருவங்கள் அஜண்டா சைலியிலேயே வரையப்பட்டிருக்கின்றன.

கடல்மல்லையின் மலைகளை யெல்லாம் சித்திரமாய்க் குடைந்து தள்ளிய பல்லவர் எங்கே? தஞ்சையை எழுப்பிய சோழர்கள் எங்கே, அவர்களின் செல்வங்கள். எங்கே? எல்லோரா என்னும் கற்கனவைக் கண்ட ராஷ்டிரகூடர் எங்கே, அவர்களின் ஐச்வர்யங்கள் எங்கே? திரைகடல் கடந்து நம் மன்னரும் மக்களும் ஸுமத்ராவிலும் ஜாவாவிலும் கம்போடியாவிலும் நடத்திய ஸாம்ராஜ்யங்கள் எங்கே? இம் மன்னரும் அவர் மஹிமையும் அழிந்த செல்வமாயின; ஆனால் இன்னும் நின்றுகொண்டு, அழியாச் செல்வமாய், மல்லை அர்சுனன் தவமும் தஞ்சை ப்ருஹதீச்வரமும், எல்லோரா கைலாஸமும், தீபாந்தரங்களில் நகரவாடமும், போரோ புதூரென்ற 'பல புத்தரும்' அம் மன்னவின் மன எழுச்சியின் உயர்வையும், அக்கால வாழ்வின் நிறைவையும் அழகையும், மக்களின் ஊக்கத்தையும் மனக் களிப்பையும், வேலைக்காரரின் அறிவையும் ஆற்றலையும் இன்னும் நமக்கு எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வழியாச் சிற்பச் செல்வங்கள் காலதர்மத்தை யெதிர்த்து இன்று நிற்காவிடில் நம் முன்னோரின் ஏற்றமே நமக்குத் தெரிய வழியில்லை. இன்று அடிமையில் மடிந்து, எங்குமே அவமானமே பங்காக நாமிருக்கும் இந்நாளிலும், இந்தியா என்றும், இந்தியர் என்றும் ஆங்காங்கு கௌரவத்தோடு பேச்சு ஏற்படுமானால், அது நம் அழியாச் செல்வங்களான வேதாந்த தத்வங்களாலும், நம் கலைகளினாலும்தான். இன்று நம் உபநிஷத்துகளையும் கீதையையும் தெரியாதவன் மேனாடுகளில் படித்தவனென்றும் நாகரிகமுடையவன் என்றும் கருதப்படான் என்றால், அவன் நம் நாடு முழுவதும் மண்டிக்கிடக்கும் கலைக் குவியல்களில் சிலவற்றை, ஒரு மஹாபலி புரத்தையாவது, ஒரு அஜண்டாவையாவது பார்த்தாவது, அதைப்பற்றிக், கேட்டாவது இல்லை யெனில் அவன் அப்படியே படியாதவனென்றும், Culture என்ற மனமேன்பாடு படைத்திலாதவனென்றுமே கருதப்படுவான்.

பரம்பொருள் என்பது அழகின் வடிவம்; அழகே உருவானது. அழகையே கண்டு கண்டு, அதனையே மனத்தால் உண்டு உண்டு, நாம் உழலும் உலக வாழ்க்கையின் அழகின்மையைக் கடந்துவிடலாமென்ற அழகு வழிபாட்டை நம் முன்னோர் கலை வாயிலாகவும், சிற்ப வாயிலாகவும் கையாண்டனர். இவ்வுலகிலேயே நம் நாட்டில் இருப்பதுபோல் வேறெந்த நாட்டிலும் ஒரு நாட்டினர் 'தாம் செய்தது' என்று சொல்லிக் காண்பிக்கக்கூடிய சிற்பங்கள் இவ்வளவு அதிகமாகக் கிடையாது. மதத்தில் எவ்வளவு பற்றோ அவ்வளவு பற்று கலைகளிலும் நம் மக்களுக்கு இருந்தது; ஏனெனில், ஒரு கோலமும்,

சித்திரமும் போடாமல், ஒரு சிற்பப் படிமை வைக்காமல், ஒரு கோயில் எழுப்பாமல், ஒரு அழகிய பாட்டுப் பாடித் தொழாமல் நம் மத வழிபாடும் ஒக்கமுடியவில்லை. நம் நாட்டின் மனப் பான்மைக்கும் பிறநாட்டின் மனப் பான்மைக்கும் ஒரு முக்கிய வேற்றுமை என்னவெனில், கலையும் சிற்பமும் வாழ்க்கைக்குள் புகுந்து, பிரிக்கமுடியாதபடி யடைந்திருந்த ஒற்றுமையே.

கடவுள் நம் முள்ளும் இருப்பார், தனியாயும் இருப்பார் என்பதுபோல் நம் மக்களுக்குள் ஒவ்வொருவரும் நாகரிகம் பழகியவரானால், இசைப் பயிற்சியும், ஓவியப் பயிற்சியும் தமக்கே ஓரளவு எற்பட்டவராய் இருக்கவேண்டும்; இப்படிப் பழக்கமுள்ள ரஸிகர்களைத் தவிர சிற்பிகளும் கலையே கையாண்டிருப்பவரும் தனியாய் உண்டு. இது போலவே, சித்திரக்கலை நம் வீட்டிற்குள்ளும் வாழ்க்கையிலும் புகுந்து நிற்கும் நிலையுமுண்டு, தனியாய் அதற்கென்று எற்பட்ட சித்திரசாலைகளில் தனித்து நிற்கும் நிலையுமுண்டு. இலக்கியததில் சித்திரங்களைக் கண்டு களிப்பதற்கான தனிக் காக்ஷி சாலையான சித்திரசாலை அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது.

சித்திரம் என்ற சொல்லுக்கு கல்லிலோ, மரத்திலோ, உலோகத்திலோ செய்த முழுவடிவம் என்பது முக்யமான பொருள்! சுவற்றில் பாதி தெரியும்படி செதுக்கப்பட்ட வடிவத்திற்கு **அர்த்த சித்ரம்**, அதாவது, அரைச்சித்திரம் Basrelief என்று பெயர்; ஸமதலமான சுவற்றிலோ, பலகையிலோ, துணியிலோ, வேறு காகிதம் முதலியவற்றிலோ கோடுகள் வரையப்பெற்று வர்ணங்கள் தீட்டப்பெற்று தோன்றும் உருவத்திற்கு பல பக்கங்களும் உண்மையில் மேடு பள்ளங்களும் இல்லாமையால் சித்திராபாஸம், அதாவது சித்திரத் தோற்றம் என்று பெயர். இதையே நாம் பெரும்பாலும் சித்திரம் என்று சொல்லுகிறோம். இவ்வோவியக்கலை நம் நாட்டில் பண்டைகாலம் தொட்டே ஓங்கி வளர்ந்து வந்தது. அழகிய கோடுகள் போடுவதும், கண்கவரும் வர்ணங்கள் பூசுவதும், பக்களின் விரல்களுக்கு இயற்கையாகி, ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு நாளும் போடப்படும் கோல சித்திரமாகவும் தோன்றின. கோலமில்லா வீடே அசுபம் என்று கருதப்படுகிறது; அதுவும் விசேஷ நாட்களில் இக்கோலம் மிகவும் விஸ்தாரமாயும் பல வர்ணங்களிலும் போடப்படுகிறது; கோலமாவை நம் பெண்கள் அநாயாஸமாய் பல வளைவுகளோடு கோடிழுக்கும் திறமையைக் கண்டு மேனாட்டு சித்திரக்காரரும் வியப்புறுகின்றனர். இக்கோலத்திற்கு ரங்கவல்லீ, அல்பனா என்று பெயர்கள் உண்டு. சித்ர சாஸ்த்ரத்தில் இது **தூளீ சித்ரம்** என்றும் **ரஸசித்ரம்** என்றும், **க்ஷணிக சித்ரம்** அதாவது அப்போதைக்கப்போது போடப்படும் சித்திர வகைகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இக்கோலத்தைத் தாண்டி வீட்டிற்குள் நுழையும் வாயிற்படியின்மேல் அன்னபக்ஷிகள், பூர்ண கும்பம், இல்லறத்தின் செழிப்பிற்கே அடிப்படையான கஜலக்ஷ்மீ இவற்றின் உருவங்கள் செதுக்கப்பெற்ற அழகிய மரவேலை. இன்னும் உள்ளே நுழைந்தோமானால், பண்டைகால வீடுகளில் ஆங்காங்கு அந்த அந்த அறைகளுக்குத் தக்கவாறு ஓவியங்கள் வரையப்பட்டிருக்கும் என்று இலக்கிய நூல்களிலிருந்து நன்கு தெரிகிறது. சயன அறையின் வாயிலில் இருபக்கங்களிலும் ரதி, ப்ரீதி, இன்பம், அன்பு என்ற தெய்வங்களும், உள்ளே காமதேவனும், இதர சிருங்கார ஓவியங்களும் உண்டு; பொக்கிஷ அறையின் முன் சங்கநிதி பத்மநிதி வரையப்பட்டிருக்கும்; பூஜை அறையில் பல தெய்வங்களின் சித்திரங்களும், சிறிய உலோக விக்ரஹங்களும் இருக்கும். இவைகளைத் தவிர பூஜையில் எரிந்து கொண்டிருக்கும் குத்துவிளக்கின் தலையே ஒரு அன்னபட்சிபோலிருக்ம்பிருக்கும்; பாக்குவெட்டியும்

கிளிபோல் இருக்கும்; தாம்ர பஞ்சபாத் திரங்களிலெல்லாம் கொடிகளும் பக்ஷி களும்; தாம்பாளங்களிலும் பூவேலை; அணியும் ஆடைகளைப் பார்த்தால், மல்லி மொக்கு, மாம்பழம், அன்னப்பேட்டு, ருத்ராக்ஷப் பேட்டு, மயில்கண் கரை. வரலக்ஷ்மீ விரதத்திற்கு வெள்ளியில் முகம் வாங்கி வைத்துக்கொண்டிருப் பவர்களும் சுவற்றில் திருவின் உருவத் தை எழுதியே ஆகவேண்டும். இப்படிச் சித்திரம் தோய்ந்தது நம் வாழ்க்கை; ஆகையால் நம் அகமே முதன் முத லான சித்திரசாலையாக விளங்கிற்று.

தனிகர்களின் மாளிகைகளிலும் அரச ரின் அரண்மனைகளிலும் இப்படிப்பட்ட சித்திரங்களும் ஓவியங்களும் மண்டிக் கிடக்கும். ஆங்காங்கு வரையப்பட்ட ஓவியங்களைத் தவிர அரண்மனைகளில் நாட்டிய ஸங்கீதங்களுக்கு எப்படி ப்ரத் யேகமான நாட்டிய சாலை ஒன்று இருந்ததோ, அதுபோல் சித்ரசாலை என்று ப்ரத்யேகமாய் சித்திரக்காக்ஷி சாலை ஒன்று இருந்தது என்று நூல்களி லிருந்து நன்கு தெரிகிறது. அரசருக்கு வேறு, ராஜகுமாரருக்கு வேறு, அந்தப் புரத்திற்கு வேறு, இப்படிப் பல சித்திர சாலைகள் ஒரு அரண்மனையிலேயே இருப்பதாய் சில நூல்கள் கூறுகின்றன. மயமதம் என்ற சில்ப நூலில் அரண் மனையின் தென் மேற்கு பாகத்தில் சித்ரசாலை இருக்கும் என்று சொல்லப் படுகிறது. தனிப்பட்ட சித்ரசாலைகளைத் தவிர, நாட்டிய சாலையில் நாட்டிய ஸங் கீத ஸம்பந்தமான ஓவியங்களும், ஜலக்ரீடைசெய்யும் ஸ்னானமண்டபத்தில் அதற்குத் தக்க ஓவியங்களும் இருக்கும். அரசரையும், தனிகரையும் போல், மிக அந்தஸ்து உள்ள விலைமாதுகளும் தம் பெருமாளிகைகளில் சித்திர சாலைகள் வைத்திருந்தனர். இம்மாதுகள் பயில வேண்டிய கலைகளுக்குள் சித்திரம் முக்யமானது. இவர்களுடைய கோஷ் டியில் உட்கார்ந்திருக்கும்போது தாம் பூலத்தோடு ரஸிகர்கள் கையில் ஒரு கத் தரிக்கோலைக்கொண்டு வெத்திலையிலோ வேறு எந்த இலையிலோ ஏதாவது அழகிய ஓவியக் கல்பனைகளை (designs) நறுக்கிக் கொண்டிருப்பர்; இது **பத்ரச் சேத்யம்** என்ற கலையாகச் சொல்லி யிருக்கிறது. ராஜகாத்திலும், மற்றவிடத்திலும் நாயக —நாயகிகளை மணம் செய்துவைக்க முயலுபவர்கள் கன்னிகளின் உருவப் படங்களையும் குமாரரின் உருவப்படங் களையும்எடுத்துக்கொண்டு அலைவர்;உஷா வின் கனவில்தோன்றிய கணவன் யாரெ னக் கண்டுபிடிக்க சித்திரலேகை உலகில் இருந்த ராஜகுமாரர் எல்லோருடைய உருவங்களையும் எழுதினளல்லவா? இதி லிருந்து portrait painting என்ற **'வித்த சித்ரம்'** நம்நாட்டில் முன் நன்கு வளர்ந்திருந்ததென்று தெரிகிறது.

இப்படிப் படமும் கையுமாய் தெருத் தெருவாயும் ஊர் ஊராயும் போகிறவர் களில் விவாஹத்தில் ச்ரமப்படுபவர் களைத் தவிர மற்றத் தொழிலாளர்களும் உண்டு. யமபட்டிகன் என்றவன் யம லோகத்தில் அனுபவிக்கவேண்டிய கொடிய வேதனைகளைக் படமாய் எழுதி, ஜனங்களுக்குக் காண்பித்துக்கொண்டு, பாவச் செயல்களில் மக்களுக்கு பயத்தை உண்டுபண்ணுவான். மங்ககன் என்றவன் ஏதாவது சித்திர படங் களை வைத்துக்கொண்டு பிச்சை எடுப் பான். சௌபனிகன் படங்களைக் கொண்டு ராமர், கிருஷ்ணர் இவருடைய சரித்ரத்தையே காட்டுவான்.

தற்போதிருப்பதுபோலும், மேனாட் டிலிருப்பது போலும் பண்டை காலங் களிலிந்தியாவில் பொதுஜனங்கள் கூடிப் பார்த்தனுபவிக்க, பொதுஜன சித்ரசாலை கள் (bublic lart gallaries) உண்டா? உண்டு; ஏராளமாய் பொதுக் கட்டிடங் கள் (club) களைப் போலவும், (theatre) களைப் போலவும் இருந்தன; அது போலவே சித்திரங்களைப் பார்த்து பொதுமக்கள் இன்புற்றிருக்க பொது சித்திர மண்டபங்களும் ஓவியச்சாலை களும் இருந்தன. இவை மிகவும் சேர்த்தியான கட்டிடங்களாயிருந்தன என்று இவற்றை வர்ணிக்கும் சில்ப நூல்களிலிருந்து நன்கு தெரியவருகிறது. நாரத சில்பம் என்ற ஏட்டுச் சுவடியி லிருக்கும் சில்ப நூலொன்றிலிருந்து

சித்திர சாலையின் அமைப்பைப் பற்றியுள்ள விஷயங்களை எடுத்து மொழிபெயர்ப்புடன் நானே வெளியிட்டிருக்கிறேன். சித்திரசாலை நகரத்தின் நடுவான இடத்தில், பல தெருக்கள் கூடுமிடத்தில், தெருவின் நடுவில் அமைக்கப்படவேண்டும். இதன் முகப்பு மாடி உள்ள கோபுர வடிவாய் அமைக்கப்படவேண்டும். கட்டிடத்தின் தோற்றம் விமான ரூபமாய் இருக்கவேண்டும். மத்தளம் போலாவது வட்டமாகவாவது இருக்கலாம். முன்பக்கமுள்ள மாடிக்குப் போக படிக்கட்டுவழி இருக்க வேண்டும். கட்டிடத்திலுள்ள விசாலமான கூடங்கள் ; இக்கூடங்கள் இரண்டு பாகங்களாய் பிரிக்கப்பட்டு குறுக்கே கம்பு போட்டுத் தடுக்கப்பட்டிருக்க வேண்டும் ; சுவற்றை அண்டின பாகத்தில் ஜனங்கள் போகாமல் கம்புக்கு அப்பாலிருந்து சுவற்றிலிருக்கும் சித்திரத்தை ஜனங்கள் பார்ப்பதற்காக இக்கூடங்கள் இரண்டாய்த்தடுக்கப்பட்டிருந்தன. இக்கூடங்களுக்கு நடுவே நேர்த்தியாய் வேலைப்பாடு செய்யப்பட்டு, உயர்ந்த மேடைபோல் ஒரு இடம் உண்டு. இதைச்சுற்றி உட்காருவதற்கான ஆஸனங்கள் அமைக்கவேண்டும். ஜன்னல்கள் வைத்துப் போதுமான வெளிச்சம் இருக்கவேண்டும். ஆங்காங்கு ப்ரதிபலிப்பில் தோன்றும் காக்ஷிகளை அனுபவிக்க சில கண்ணாடிகள் வைத்திருக்கும். கட்டிடத்தின் கவாயில் மான் வைத்ததாயும். வெளிப்பக்கம் திண்ணைகள் உள்ளதாயும் மேலே வேலைப்பாடுள்ளதாயுமிருக்கும். மொத்தத்தில் இங்கு கூடும் ஜனங்கள் குதூஹலமாய் போது போக்க வேண்டியபடி விளக்குகளும், தொங்கும் மாலைகளும் இதர அலங்காரங்களும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட சித்திரசாலைகளில் உல்லாஸமான ஓவியங்கள் ப்ரகாசமான வர்ணங்களில் அலங்காரங்களுடன் எழுதப்பட வேண்டும். இவைகளின் நுண்ணிய ரேகை அழகையும், மேடுபள்ளம் கொடுக்கப்பட்ட திறனையும் பண்டிதரும் கலைஞரும் புகழுவர் ; ஆபரணங்களைக் கண்டு ஸ்த்ரீகள் வியப்புறுவர் ; மற்றவர் பளிச்சென்ற வர்ணங்களினாலேயே கண் பறிக்கப்படுவர். இந்திய மனப்போக்கின் முடிவிடம் மதமும், கடவுளுமல்லவா ! கோயிலைச்சுற்றியல்லவா ஊர் ஏற்படும் ; எல்லா ரஸ்தாக்களும் நம் கோயிலைக் குறித்தல்லவா போகின்றன. கலைகள் எல்லாம்; இசையோ, நாட்டியமோ, ஓவியமோ, கடவுளின் வழிபாட்டிற்கே உதவி தம்மையும் வளர்த்துக்கொண்டன. மேலே நாம் சொன்ன வீடுகளிலும் அரண்மனைகளிலும் பொதுமக்களுக்கான சித்திரசாலைகளிலும் இருந்த நம் பண்டைகால ஓவியங்கள், அக்கட்டிடங்களுடன் போயின. ஆனால் இந்தியாவில் மிகப் பழைமையான காலந்தொட்டு அரிய ஓவியக்கலையொன்று வளர்ந்திருந்ததென்று இன்னும் நமக்குத் தெரிவித்து, அப்பழைய இந்திய ஓவியங்கள் எம்மாதிரியானவை, அவற்றின் போக்கு என்ன ? ரேகையின் லாவண்யமாயும் ஸுகுமாரமாயுமிருக்கும் அழகென்ன ! மனித உருவங்களில், முக்யமாகப் பெண் வடிவங்களின் அங்கவின்யாஸ ஸௌந்தர்யங்களின் அழிவிலா காக்ஷிகள் எவ்வளவு ? எவ்வளவு ஆபரண வகைகள் ? தலைமயிரைக் கட்டும் வகைகள்தான் எவ்வளவு ! தாமரைகளும், கொடிகளும்; நீரோடைகளில் விழுந்தாடும் யானைகளும் இப்படி மிருக, விருக்ஷக் காக்ஷிகளை எப்படி நம் பண்டை ஓவியக்காரர் சித்தரித்தனர் என்றெல்லாம் நமக்குத் தெரியுமாறு காண்பித்து, இன்றும் அழியாமல் நிற்கும் சித்திரங்களோடு கூடிய நாம் வாழும் சித்திர சாலைகள் நம் கோயில்களே. இக் கோயிற் சித்திரசாலைகளில் இரண்டு பிரிவுகள் : ஒன்று பௌத்தரும் ஜைனரும் வழிபட்டுவந்த மலையில் குடைந்தகுகைக் கோயில்கள்; இரண்டு, காஞ்சியிலும் தஞ்சையிலுமுள்ளது போல் கட்டப்பட்ட கோயில்கள். குகைக் கோயில்களில் சித்திரசாலையென்றே அழைக்கக்கூடியதாயும், உலகனைத்தும் இன்று ப்ரஸித்தி பெற்றதாயும், இந்தியாவிலேயே மிகப்பெரிதும் அரிதும் அதிகமுமான ஓவியங்களோடு கூடியதான **அஜண்டா** குகைகள்

இவை கி. மு. 2வது நூற்றுண்டிலிருந்து ஆரம்பித்து வரையப்பட்ட பழைமை வாய்ந்தன. உலகத்தில் நம் வாழ்க்கையில் வரும் ஸம்பவங்களில் இங்கு விடப்பட்டன ஒன்றுமில்லை: இங்குள்ள ஆடல், பாடல், சிறு குடிகளின் இல்வாழ்க்கை. ராஜாங்கங்களின் விருத்தாந்தம், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இன்னுன்கையும் விளக்கும் ஸந்தர்ப்பங்கள், மிருக, பக்ஷிகளின் காக்ஷிகள், கொடிச் சித்திரங்கள்,— உடுப்புவகை, அணிவகை, ஆஸனவகை— இங்கு காணப்படும். உலகம் மிகவும் நெருக்கமாயும் முடிவில்லாததுமானது. அஜண்டாவைப்போய் பார்க்காத இந்தியர் பலரிருக்கலாம்; பார்க்காத மேனட்டு ரஸிகர்கள் இல்லை. கங்காஸ்னனம், ஸேதுதர்சனம் என்று பக்தியுள்ளவர் எப்படித் தம் வாழ்க்கையில் செய்து முடித்தாகவேண்டிய தர்மமாகக் கருதுகின்றனரோ அப்படியேதான் அஜண்டா தர்சனமும் கலாரஸிகர்களுக்கு. அஜண்டாவை தரிசித்து நான் திரும்பும் போதும் இந்தப் பெரும் களிப்பும், திருப்தியும்தான் எனக்கிருந்தன.

லங்கையில் ஸிகிரியா என்ற ஸிம்மகிரியின் உச்சியில், ஏறிப்போக முடியாத இடத்தில், கி. பி. 7-வது நூற்றுண்டில் கச்யபன் என்ற அரசன் பதுங்கிக் கிடக்கும் போது எழுதப்பட்ட அற்புதமான ஓவியங்கள் இருக்கின்றன. இங்கு 21 பெண் உருவங்கள் அஜண்டா சைலியிலேயே வரையப்பட்டிருக்கின்றன.

தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் ஆந்திரத்திலும் பற்பல கோயில்களில் பிற்காலத்திய ஓவியங்கள் இருக்கின்றன. ஆனல் முக்யமாய் தென்னிந்திய ஓவியச் சாலையாய் நாம் கருதக்கூடிய கோயில்கள் மூன்று. இவற்றில் காலத்திலும், அளவிலும், அழகிலும் முதற்பட்டது புதுக்கோட்டையின் அருகிலுள்ள சித்தன்னவாசலிலுள்ள ஜைனகுகையில் உள்ள சித்திரங்கள். இவற்றை 7-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஆக்கியவன் பல்லவ மன்னன் முதலாவது மஹேந்திரவர்மன்; இவனுடைய உருவமென ஊகிக்கத்தக்கதோர் மஹாபுருஷ சித்திரமொன்று சித்தன்னவாசல் குகையின் தூண் ஒன்றில் இன்னும் அழியாமல் இருக்கிறது. அர்த்த மண்டபத்தின் மேற்பக்கத்தில் 'ஸமவஸரணம்' என்ற ஜைன ஆகமக்காக்ஷி மிகவும் அழகாய் எழுதப்பட்டிருக்கிறது. காஞ்சி கைலாஸநாதர் ஆலயத்தில் இதே நூற்றுண்டின் பின் பாகத்தில் வரையப்பட்ட பல்லவ ஓவியங்கள் இருந்தன; ஆனல் அனேகமாய் மறைந்து போன இக்காக்ஷிகளில் இரண்டொன்றே இன்னும் நமக்குத் தெரிகின்றன. இதற்குப் பிறகு 10வது நூற்றுண்டிலே ராஜ ராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பிருஹதீச்வர ஆலயத்தில் அச் சோழ மன்னன் காலத்திலேயே சித்திரங்கள் எழுதப்பட்டன. இவை கர்பகிருஹத்தைச் சுற்றிய ப்ரகாரத்தில் இருக்கின்றன. இவற்றில் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளின் சரித்ரம், பல மஹாபுருஷர்களின் முகங்கள், மிகப் பெரிதான திருபுரஸம்ஹாரக் காக்ஷி முதலியன நன்கு விளங்குகின்றன.

இப்படி வீட்டிலும், பொதுவிடமான சித்திரசாலைகளிலும், கோயில்களிலும் சித்திரங்கள் ஜனங்களின் கலையையும் வாழ்க்கை ரஸத்தையும் வளர்த்து, கதைகளையும், கொள்கைகளையும் உருப்படுத்திக் காட்டி பொதுமக்களின் கல்வியையும் வளர்த்து, கடவுளின் வழி பாட்டிற்கும் ஏதுவாயிருந்தன. தற்போது பெரும் நகரங்களில் மியூஸியம், school of AAS, இவைகளிலும், தனவந்தரின் வீடுகளிலும் சித்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. நாட்டின் அழியாச் செல்வங்களான கலைகளை வளர்த்துப் பாதுகாத்துவர புது இந்தியாவில், ஸர்க்காரின் ஆதரவில், ஒரு பொது புது கலைத்திட்டத்தின்படி ஒவ்வொரு டௌனிலும் நாட்டிய ஸங்கீத சித்ரசாலைகள் ஏற்படவேண்டும். நம் வாழ்க்கை மறுபடியும் கலைகளில் தோய்ந்ததாய் ஆக வேண்டும். *

* இது சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து பேசப்பட்டது.



"அவனுக்கு எந்த வேலைக்கும் போதிய சக்தி இருக்கிறது!"

புஷ்டியைத் தரத்தக்கதும், விடமின் கூடினதுமான உணவுதான் குறைந்த சக்தியைத் திரும்பவும் கொடுக்கும். இந்த சமயத்தில்தான் டால்டா மிகவும் உதவியளிக்கிறது. டால்டாவினுல் உணவிற்குச் சேர்க்கப்படும் போஷாக்கும், விடமினும் சக்தியை காப்பாற்றுகிறது. சுகத்திற்காக உங்களுடைய குடும்ப ஆகாரங்களை டால்டாவினுல் சமையல் செய்யுங்கள். அதுதான் சக்திக்கும், சுகத்திற்கும் காரணம்.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. டால்டாவினுல் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும் சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினுல் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.




**விடமின் சேர்ந்த டால்டா**

தாவர எண்ணெயால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாத முள்ளது— சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 21-18 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

# வேறென்ன வேண்டும்?

ல. ரா. விசுவநாத சர்மா, கீரனூர்.

[மனிதன் பகுத்தறிவுள்ளவன். அவனால் செய்யமுடியாதது ஒன்றுமேயில்லை. இதற்குப்பழைய சரித்திரங்களே சான்று ]

1

**கொ**ஞ்ச காலமாக நம் நாட்டில் மனித சமூகத்தினிடையே ஒருவித ஓலம் ஏற்பட்டிருக்கிறது. நண்பர்கள் சந்திக்கும் போது அவர்களது சம்பாஷணையில் அது வெளியாகிறது.

"என்ன ராமதாஸ், இப்பொழுது எங்கே இருக்கிறாய்; என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"திருச்சினாப்பள்ளியில் ஒரு பாங்கியில் முப்பது ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவாக இருக்கிறேனப்பா".

"போகிறது. இவ்வளவு நாள் கஷ்டப்பட்டதற்கு இப்பொழுதாவது பலன் கிடைத்ததே; ஸந்தோஷம்!"

"ஆமாம். என்ன வேண்டியிருக்கு."

"ஏண்டா இப்படி மூக்கால் அழுகிறாய்?"

"பின்னே என்ன? வேலைக்குப்போய் மாசம் ஆறாச்சு. கடனும் அறுபது ரூபாய்க்கு மேலாகிவிட்டது"

"அப்படி என்ன அதிகப்படிச் செலவு?"

"அதிகப்படிச்செலவா? புருஷன் மனைவி இரண்டே பேருக்கு—சிக்கனமாகச் செலவழித்தாலும்—மாதம் முப்பது ரூபாய் போதவில்லை"

"காரணம்?"

"என்னடா உலகம் தெரியாதவன் போல் இப்படிக் கேட்கிறாயே! சாமான்கள்தான் ஒன்றுக்கு மூன்று பங்கு விலை விற்கிறதே! எப்படிச் சமாளிக்கிறது?"

2

நகர் புறங்களில் உள்ளவர்கள்தான் இப்படி அலுத்துக் கொள்கிறார்கள், சொற்ப சம்பளக்காரர்கள்தான் இந்த மாதிரி ஆயாசப்பட்டுக் கொள்கிறார்கள் என்பதில்லை. பட்டணவாசம், கிராமாந்தரம், எங்குபார்த்தாலும், எல்லோரிடத்திலும் இந்தமாதிரி 'சாமான்கள் கிடைக்கவில்லை,' 'விலைகள் அசாத்தியம்' 'செலவுக்கு வருவாய் போதவில்லை'.... என்பனபோன்ற ஓலந்தான் அதிகப்படியாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? ஆராய்ந்து பார்க்குமிடத்து இப்படிப்பட்ட துர்த்தசை இந்த நாட்டிற்கு ஏற்படவேண்டிய நிமித்தமே இல்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். நதிகளால் சூழ்ந்து பெரும் நிதியாக விளங்கும் பாரதநாட்டில் பிறந்த மக்கள் வாழ்க்கையின் சாதனங்களுக்காகப் பிறர்தயவை நாடித்தான் தத்தளிக்க வேண்டுமென்பதில்லை.

3

மனிதனுக்கு வாழ்க்கையில் சாதனங்கள் பல தேவை எனினும் தவிர்க்க முடியாதவை நான்கு. ஊண், உடை, தங்குமிடம், பிரயாணவசதி. இந்த நான்கும் ஆதிகாலத்தில் ஒரு மாதிரியாகவும், இடைகாலத்தில் வேறு விதமாகவும் இருந்து, தற்காலம் — நவநாகரிகத்தின் தாண்டுதலால்—நூதன வழிகளில் மாறிவிட்டது. குறிப்பிட்ட நான்கும் நாநூறு நாலாயிரமெனப் பெருகிவிட்டது. திடீரென்று அந்த நவநாகரீகத்தின் உச்ச நிலையிலிருந்து— கால நிலைமையை அநுசரித்துக்கூட—அடிவாரத்திற்கு வரக்கூடாமல் தவிக்கிறார்கள் ஜனங்கள். மேலே கூறிய நான்கு சாதனங்களுள்

பிராணன், மானம் இரண்டுக்கும் இன்றியமையாததான உணவு,உடை இரண்டுக்கும் பஞ்சம் ஏற்பட்டு நம் நாடு இன்று மிகவும் களைத்து வாடுகிறது.

4

மனிதன் பகுத்தறிவுள்ளவன். அவனால் செய்ய முடியாதது ஒன்றுமே யில்லை. இதற்குப் பழைய சரித்திரங்களே சான்று. வீரரும், தீரரும், மகா மேதாவிகளும், தந்திரசாலிகளும் தோன்றி, இருந்து அரிய பெரிய செயல்களைப் புரிந்த நாட்டிலேதான் நாமும் தோன்றியிருக்கிறோம். அதன் பயனைத்தான் நமக்கும் அப்பெரியார்களின் அம்சங்களில் ஒரு சிறிதேனும் இருந்து வருகிறதென்பதைப் பெருமையாகவே சொல்ல நேரிடுகிறது. பூரணமாகவே இருக்கும்; காலத்தின் மாறுதலாலும், நமது மனோநிலை, நடத்தை முதலியவைகளாலும் குன்றிப் போயிருக்கின்றன சக்திகள். ஆக, மேற்குறித்த பூமான்களின் மரபில் வந்த நாம் இதுவரையில் எதையும் அபாரமாகச் சாதித்துவிடாமற் போனாலும் தற்போதைய நிலைமையை யாவது சமாளிக்கலாம். இதுகூட முடியவில்லை யென்றால் இதைவிட தௌர்ப்பாக்கியம் வேறில்லை. அநாவசிய ஆடம்பரங்களை ஒழித்து அமைதியாக வாழ 'தெரியவில்லை' 'முடியவில்லை' என்பதெல்லாம் வீண்.

5

உணவு சம்பந்தப்பட்டவரையில் 'இப்படித்தான் இருக்கவேண்டும்' என்கிற—நவ நாகரீகத்தில் வந்த — நியதியை அறவே மறந்து, எளிய முறையில் உண்பதால் என்ன மோசம்? பசிதீர வேண்டும்; அவ்வளவுதானே? எளிய முறை என்றால் ருசியற்றதும், காட்டுமிராண்டித்தனமுள்ளதுமான ஆகாரங்களை உட்கொள்ள வேண்டுமென்பதில்லை. உள்நாட்டிலே, அவரவர்களின் வாசஸ்தலத்திலோ, சுற்றுப் புறத்திலோ சேகரமாகும் தான்யராசிகள் கறிகாய்களைக் கொண்டு சிக்கன முறையில் ருசி மிகுந்த உணவைத் தயாரிக்க முடியாதா? ஆரோக்கியம் பெருகும்; பஞ்சம் தீரும். வீணே புதுமையில் மோஹங்கொண்டு அதிகப் பொருளை அள்ளி இறைத்து உடலுக்கு நோய்களையும் மனதுக்குக் கஷ்டத்தையும் விலைகொடுத்து வாங்கு வதைவிட மதியீனம் வேறில்லை.

அஸ்கா (சர்க்கரை) கிரஸின் (மண்ணெண்ணெய்) சோப்பு வகைகள்........ முதலியன வெல்லாம் இல்லாமல் காலந்தள்ள முடியாதா? முடியும்; சகிப்புத் தன்மை வேண்டும். நாவையும், மனத்தையும் அடக்கும் சக்தி வேண்டும்.

"நாளைக்கு முக்கியமான ஒரு நண்பர் வருகிறார். காப்பி கொடுக்க வேண்டாமா? சர்க்கரை இல்லாமல் என்ன செய்கிறது? கௌரவமுள்ள அந்த ஸ்நேகிதர் முன்னிலையில் கடலை எண்ணெய், இலுப்ப எண்ணெய் முதலியவைகளைக் கொண்டா விளக்கெரிப்பது? சேச்சே! அநாகரீகம்!........"

அவ்வளவுதான். கையிலிருக்கும் காசுக்குப் பிடித்தது சனியன். சர்க்கரை வாங்கக் காகிதம் அல்லது பை, மண்ணெண்ணெய் வாங்க டின் அல்லது சீசா இவைகளைத் தூக்கிக்கொண்டு கடைகடையாய், தெருத் தெருவாய் அலைய வேண்டியதுதான். நண்பர்முன் நாகரீகத்தைக் கொண்டாட அவ்வளவு உத்வேகம்? மேற்கண்ட சாமான்களுக்காக ஊரூராய் அலைந்து அவதிப்படுவோரும் உண்டு. ஆனால் கூட்டங் கூட்டமாய்க் கடைகளில் போய் மோதிக்கொண்டு பிரயோசனம்?

6

இன்றையதினம் வர்த்தகர்களில் சிலர் தங்களை பூலோக வாசிகளாகவே எண்ணிக்கொள்ளவில்லை. சாதாரண காலத்தில் 'என் கடையில் பத்து வரவு வைத்துக் கொள்ளுங்கள்' என்று ஒவ்வொருவரையும் வரவேற்று உபசரித்த வியாபாரிகள் தற்காலம் தம்மை ஒரு தனி வகுப்பாய் எண்ணி இறுமாந்திருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த குளிர்ந்த முகம், இன்சொல் முதலிய ஒன்றையுமே இப்பொழுது காணமுடிவதில்லை. ஏதாவது கேட்டால் பதிலே கிடையாது.

தப்பித்தவறி வரும் பதில் கர்ண கடூரமாயிருக்கிறது. நல்ல அந்தஸ்திலும், நடுத்தர அந்தஸ்திலும் உள்ளவர்களின் பாடே பெரும் பாடாக இருக்கையில் பொழுது பூரா உழைத்துச் சில அணாக்களைக் கூலியாகப் பெற்று வரும் ஏழைகளின் நிலைமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அவர்கள் இந்த வியாபாரிகளின் உருட்டல் மிரட்டல்களினிடையே கடையின் ஓரமாக வெகு நேரம் ஒண்டி நின்று அன்றைய வருமானத்தை அப்படியே கொடுத்துச் சொற்ப சாமான்களைப் பெற்றுக் கொண்டு வாய் பேசாது துக்கத்துடன் செல்லும் காட்சி மிகவும் பரிதாபகரமானது.

நம் ஜனங்கள் சீனி, மண்ணெண்ணெய் முதலிய அபூர்வமாயிருக்கும் சாமான்களுக்கு மட்டுந்தான் கடைகளுக்குப் போய் கஷ்டப்படுகிறார்கள் என்பதில்லை. தாமே சுலபத்தில் சேகரித்துக் கொள்ளக் கூடிய சாமான்களைக் கூட வியாபாரிகளிடம் எதிர்பார்க்கிறார்கள். சோம்பேறித்தனமும் அலட்சியபாவமும் நம்மை இப்படிக் கெடுத்துவிட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் வேண்டிய உணவுப் பொருள் பூராவும் எளிதில் கிராமத்து நன்செய் புன்செய்களில் கிடைக்கும். முயற்சியும் உழைப்பும் வேண்டும். அதுவும் ஆரம்பத்தில்தான் சற்றுக் கஷ்டமாயிருக்கும். நாளடைவில் வெகு சுலபமாகிவிடும்.

7

**யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரவர்கள்** எழுதிய கட்டுரையொன்று **"பாரதமணி"**யில் வெளியாகியிருக்கிறது. பெயர் **"தான்யலக்ஷ்மி."** மிகவும் அழகான கட்டுரை. அதைப் படிக்கும் போது, அதிலே அவர் குறிப்பிட்டுள்ள கோயிலடி கிராமத்திற்குப் போகவேண்டும், புண்ணியாத்மாக்களான ராயரையும் அவர் குடும்பத்தினரையும் கண்டுகளிக்கவேண்டும், சுபிட்சம் நிறைந்த அங்கே சிறிதுகாலமாவது தங்கவேண்டும், என்றெல்லாம் தோன்றுகிறது.

என்ன ஆச்சர்யம்! கட்டுரையளவில் கோயிலடியும் பூலோகத்திலுள்ள ஒரு கிராமந்தானே' ராயரும் அவர் குடும்பத்தினரும் நம்போன்ற மனிதர்தானே? மேற்கண்டவாறு நமக்குத் தோன்றுவானேன்?

அக்கரைப்பச்சையை நாடும் சுபாவம் நமக்கு அதிகம். நம்ரத்தத்தில் அந்த சுபாவம் நன்றாக ஊறிப்போய்விட்டது. 'ராமனிருக்குமிடமே அயோத்தி' என்பதற்கிணங்க நம் ஊரும் நாமும் கோயிலடி போலவும் ராயரும் அவர் குடும்பத்தினர் போலவும் ஏன் ஆகக்கூடாது! என்கிற கேள்வி எழும்போது கிடைக்கும் பதில் இதுதான்:— எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது பத்திரிகையில் கதையும் கட்டுரையும் எழுதிவிட்டால் சரியாய்ப்போச்சா!' நடைமுறையில் அநுஷ்டிக்க இங்கே யாராலிருக்கு!

பத்திரிகைகளில் இதுபோன்ற விஷயங்கள் வெளியாவது இன்று புதிதல்ல; யாரும் அறியாததுமல்ல. பார்க்கப்போனால் எல்லோரும் தினசரி எளிதாகப் பேசிக்கொள்வதுதான். ஆயினும் ஒரு நல்ல விஷயத்தை அடிக்கடிக் கேட்கும் போதும், படிக்கும்போதும் மனதிற்குப் புது சக்தி ஏற்படக்கூடும். அந்தச் சக்தி செயலில் பரிணமிக்காதா, என்கிற நோக்கந்தான். நிரயோசித்து விவசாய விஷயங்களில் தீவிரமாகப் பாடுபடுபவர் வெற்றிபெறுவர்; சோம்பலுக்குத்தான் எட்டுச் சுரைக்காய்.

8

உடை விஷயமும் இப்படித்தான். மலிவாகக் கிடைத்த காலத்தில் நாகரிகத்திற்கேற்றவாறு உயர்தர ஆடைகளை உடுத்தவர்கள் இன்று—காலநிலைமையை அநுசரித்துக்கூட அதை மாற்றிக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஒன்றுக்குப் பத்துவிலை. அப்படியும் நல்ல உடைகள் கிடைக்கவில்லையே என்ற குறை. ஏன் இத்தனை கஷ்டம்? எல்லாருமே அநாவசிய ஆடம்பர உடைகளை விடுத்து அவசியத்திற்கேற்ப உடுத்தால்? துணிப் பஞ்சம், பணப் பஞ்சம் இரண்டும் தீரும்.

அன்று மகாத்மா காந்தியடிகளின் வார்த்தையை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை இன்றுமாத்திரம் என்ன; இப்பொழுதும் அப்படியேதான் இருக்கிறது நிலைமை. அவரைப் பார்த்துக்கூட நாம் சீர்திருந்தவில்லை.

செல்வச்சீமானுக்குப் பிறந்து, செல்வமாக வளர்ந்து, ஆங்கிலக் கல்வியில் தேர்ந்து, கீதை முதலியவை தெரிந்து, தேசநிலைமை உணர்ந்து, பட்டம் பதவிகளைத் துறந்து, தேசபக்தியால் நிறைந்து பல்லோராலும் தியாகி யெனக் கொண்டாடிப் போற்றப்படும் அந்த உத்தமர் சட்டை முதலியனவின்றி முழங்கால் வரை துணி புடுத்து உலகெல்லாம் சுற்றும்போது, அரசரையும் அதிகாரிகளையும் கண்டு பேசும்போது நாமிருக்கும் நாகரீகக் கோலாகல நிலைமையைப் பற்றி நாமே சற்றுச் சிந்தித்தால் நமக்கே நகைப்பேற்படும். எல்லாருமே மகாத்மாவாகிவிட முடியாதுதான். அநாவசிய ஆடம்பரங்களை ஒழிப்பதன்மூலம் கஷ்டங்களைத் தவிர்த்து சுகம் பெறலாம்.

அன்னர் இவ்வளவு உடல் தளர்ச்சியிலும், அரசியல் பிரச்னைகளிலும், தேச நன்மை பற்றின சிந்தனையிலும் இடையருது உழன்றுவரும்போது சர்க்காவும் கையுமாக இருக்கிருர். நாமோ சும்மா உட்கார்ந்து ஈயோட்டிக்கொண்டு வம்பு பேசினும் பேசுவோம்; தக்ளியைத் தீண்டுவதில்லை.

9

பந்தடிக்கும் துடுப்பு ('பாட்') வாங்கக் கடைவிதிக்குச் சென்ற ஒரு நண்பரை வழிமறித்து பாட் வாங்குவதைவிட ஒரு ராட்டை வாங்குங்கள், அல்லது ஒரு மண்வெட்டியோ கோடறியோ வாங்குங்கள். ராட்டை மானத்தைக் காக்கும் துணியையும், மண்வெட்டி பிராணனைக் காக்கும் உணவையும், கோடறி விறகு முதலியவைகளையும் உதவும். பந்தடிக்கும் நாகரிக விளையாட்டில் ஏற்படும் உற்சாகமும் சரீரப் பயிற்சியும் இவைகளை உபயோகிப்பதாலும் ஏற்படும் என்று கூறித் தடுத்துவிட்டாராம் நம் பாரதியார்.

இது கேள்விப்பட்ட செய்தி. உண்மையாக இருக்கலாம். அல்லது "நானறிந்த பாரதி" "பாரதியும் நானும்" என்றெல்லாம் மகுடமிட்டுக்கொண்டு பத்திரிகைகளில் விளாசுபவர்களின் கைச்சரக்காகவுமிருக்கலாம். எப்படி யிருந்தாலும் விஷயம் மேன்மையானது. போற்றத்தக்கது

10

ஆயிரம் பாடுபட்டு நூலை நூற்றுக் கடையில் கொடுத்துத் துணி வாங்குவதில் உழைப்புக்குத் தக்க லாபம் இல்லாததோடு உரிய காலத்தில் துணி ஒழுங்காகக் கிடைக்கவில்லையே என்றுகுறைப் படுகிருர்கள் சிலர். அவர்கள் இன்னும் கொஞ்சம் முயற்சிக்கவேண்டும். தான் நூற்பதோடு, தன் குடும்பத்தினர், நண்பர்கள், அவர்களின் குடும்பத்தினர்கள் அனைவரையும் தூண்டவேண்டும். கிராமங்களில் தறி போட ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு துணிப்பஞ்சம் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறையும்.

ஏன், இது நடைபெறக் கூடாத விஷயமா? நம் நாட்டில் பஞ்சுக்குப் பஞ்சமா; ராட்டைக்குப் பஞ்சமா? சேவாளர்களுக்குப் பஞ்சமா; மர சாமான்கள் மற்றவைகள் கிடைக்காதா? மனம் வந்து சோம்பலை விட்டு ஒன்று பட்டு உழைக்கும் தன்மைதான் பஞ்சமாக இருக்கிறது. நூற்றில் ஒருவர் நூற்றால் நூறுபேருக்கும் துணி கிடைக்காது. எல்லோரும்தான் மற்ற வேலைகளினிடையே விவசாயம், நூல், தறி முதலிய விஷயங்களுக்காகக் கொஞ்ச நேரத்தையாவது செலவிட வேண்டும். மனிதன் கௌரவமாக உயிர் வாழ உணவும் உடையும் தாராளமாகக் கிடைத்து விடும் பட்சத்தில் வேறென்ன வேண்டும்?

---

சந்தாதாரர்கள் விலாச மாற்றங்களை அவ்வப்போது பாரதமணி காரியாலயத்திற்கு அறிவித்துவிடக் கோருகிறோம்.

மானேஜர்.

---

# பரத்பூர் சமஸ்தான கிராம சங்கங்கள்

ஆங்கிலச் சொற்பொழிவு: பரத்பூர் சமஸ்தான திவான் ராஜமந்திரப் பிரவீண
ஸ்ரீமான் ஏ. வி. ராமநாதன்
மொழிபெயர்ப்பு: ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்.

[கிராமத்தின் சகலமான காரிய கலாபங்களையும் பஞ்சாயத்து தன் ஆட்சியில் வைத்து கொள்ளவேண்டும் ]

**நா**ன் உயர்ந்த ஆசைகளுடன் பரதபுரத்திற்கு வந்தேன். கிராம சங்கங்கள் உம்மில் அதிகமென்று என் நண்பர்கள் சொல்லியிருந்தனர். பஞ்சாயத்துக்களென்றால் எனக்குப் பஞ்சப்பிராணன். இவ்விடத்தில் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றனவென்று எனக்குத்தெரிய வந்தது. கிராம காரியங்களில் நீங்கள் உழைப்பாளிகளென்று நான் அறிந்திருந்தேன். இராஜாங்கத்தினர் கேந்திரகாரியங்களிலும், பஞ்சாயத்தார் கிராமகாரியங்களிலும் உழைத்து வருகிறார்களென்று நான் எண்ணி இருந்தேன். என் எண்ணங்களனைத்தும் வெறும் (கனவுதான்) பிரமைதான் என்று அநுபவத்தின் மூலம் அறிந்துகொண்டேன். இவ்விடத்திற்கு நான் வந்து ஆறுமாதங்களாயின. பஞ்சாயத்துக்களின் சுறுசுறுப்பே எனக்குப்புலப்படக்காணோம். உங்களனைவருக்கும் 1933-ம் வருடத்திய பஞ்சாயத்துச் சட்டம் இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களின் சட்டமும் இருக்கிறது. இவ்விரண்டும் இருந்த பிறகு கிராமவாசிகள் தங்களுக்கு அவசியமானவைகளைத் தாமே செய்துகொள்வதற்குச் சக்தர்களாகவிருக்கவேண்டும். சிவில், மற்றும் கிரிமினல் அதிகாரம் அதற்கிருக்கின்றன. ராஜ்யாடளிதத்தின் உரிமையும் அதற்குண்டு. பணம், விதை எரு வேறுவித உதவிகளையும் கூட்டுறவு சங்கம் உதவுகிறது. லாபம் சம்பாதித்து கிராம உத்தாரணத்திற்காக இந்த லாபத்தை உபயோகியுங்கள். கிராமத்தின் சாமானியக் காரியங்களுக்குக் கிராம பஞ்சாயத்தின் பணமிருக்கிறது. கேந்திர சர்க்காரின் அவலம்பனமே எனக்கு இவ்விடத்தில் அதிகமாகத் தோன்றுகிறது. இதனைத்தும் நிற்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கூட்டுறவு சங்கம், அல்லது பேங்க் (Bank) இருக்கவேண்டும். பெரியதொரு அளவில் பொருள்களை வாங்கிச் சங்கத்தின் அங்கத்தினர்களுக்குச் சில்லறையாக விற்கவேண்டும். பஞ்சாயத்துக்கள் அதிகச் சுறுசுறுப்புக் கொள்ளவேண்டும். கிராமக்காரியத்திற்காக வாரத்திற்கொருமுறை கிராம ஊழியர்களை ஒருமிக்கச் சேர்க்கவேண்டும். ரஸ்தாக்களை பஞ்சாயத்தே கவனித்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளின்பாடசாலையின் எண்ணிக்கைகளை (மாணவர்களின்) பஞ்சாயத்துக் கவனித்துவர வேண்டும். அவ்வப்பொழுது வந்து கவனித்து செல்லும்படிக்கு வைத்தியனையும் மருத்துவச்சியையும் நியமிக்கவேண்டும். கிராமத்தின் பரிசுத்தமென்றால் எரு சேகரிக்கும் பள்ளத்தில் அவ்வப்பொழுது அழுக்கைப் போக்கிச் சுத்தம் செய்வது, சரண்டிகளின் ஜலத்தை எருப் பள்ளத்தின்புறம் திருப்புவது இத்தகைய காரியங்களைப் பஞ்சாயத்து கைக்கொள்ளவேண்டும். அழுகி நாறும் பள்ளங்களை மூடிவிடவேண்டும். வியாதியஸ்தர்களை அருகிலிருக்கும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லவேண்டும். தடாகங்களின் அருகிலும், கிராமத்தில் பொதுஜனங்கள் உபயோகார்த்தமாக விடப்பட்டிருக்கும் இடங்களிலும் அழகிய செடிகளை வளர்க்கவேண்டும். நெசவுத்தொழில், தச்சுவேலை, இரும்பு வேலை, பாய் பின்னுவது, கூடை பின்னுவது முதலிய கிராமக்கைத்தொழில்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். கிரா

கிராமத்து இளைஞர்களைத்தொழில் பயில்வதற்காக வெளியே அனுப்பவேண்டும். அவர்கள் திரும்பிவந்து கிராமத்தொழில்களைப் பிராரம்பிக்க வேண்டும். கற்பதற்கு அவசியமானசெலவைப் பஞ்சாயத்து அளிக்க வேண்டும். பொருள்களைச் சேர்ப்பதற்குக் கூட்டுறவுச் சங்கம் முன்வரவேண்டும் ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு இளைஞனையாவது வெளியே அனுப்பவேண்டும். மாத்யமபரீக்ஷை தேறிய ஒவ்வொரு இளைஞனுக்கும் தகுந்த வெகுமதியளித்து கிராமத்திற்கு அழைத்துக்கொள்ள வேண்டும்.

பரதபுரத்தில் ஜமீனுக்குச் சம்பந்தப்பட்ட கிரயப் பத்திரத்தை கிராமத்தில் பிரசித்தப்படுத்தாமல் ரிஜிஸ்டர் செய்யும்படிக்கில்லை. இதொரு நல்ல செய்தி. பத்திரத்தின் சத்தியத்தைப் பஞ்சாயத்து ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். ரிவினியூ விற்பனைகள், போலீஸ் தஸ்தகிரிகள், சிவில் தஸ்தகிரிகள், (Arrests) விசாரணைகள் அனைத்தும் பஞ்சாயத்தாரின் சமக்ஷமத்தில் பஞ்சாயத்தின் மூலமாகவே நடைபெறவேண்டும்.

இவ்விதம் கிராமத்தின் சகலமான காரிய கலாபங்களையும் பஞ்சாயத்து தன் ஆட்சியில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ராஜாங்கம் (Government) கிராமப் பஞ்சாயத்திற்கு பணம் தருகிறது. கூட்டுறவுச் சங்கத்திற்கும் கடன் கொடுக்கிறது. பெரிய பெரிய கிணறு, குளங்களைக் கட்டிவைக்கிறது. ஆஸ்பத்திரி, மருத்துவச்சி, பிரசவ ஆஸ்பத்திரி, முக்கியமான ரஸ்தாக்கள் இவைகளுக்காகவும் பணம் உதவுகிறது. பெரிய பெரிய கைத்தொழிற்சாலைகளையும் பிராரம்பிக்கிறது. நாள்தோறும் நடைபெறக்கூடிய அற்ப காரியங்களின் சார்பாகவெல்லாம் கிராமங்கள் ராஜாங்கத்தினிடம் சரண்புகப்படாது.

கடவுளின் அநுக்கிரகம் நல்லதாக இருக்கிறது. அதிகப்படிதானியம் சேர்க்திருக்கிறது. விலையும் ஏறி இருக்கிறது. ஒரு மணுவிற்கு பிந்திய வருடத்தின் இரண்டு பங்கு பணம் கிடைக்கிறது. யுத்தத்திற்குப்பின் இதற்கு இரண்டத்தனை பணம் கிடைக்கும். ஒரு வருடத்திற்கு அவசியமான தானியத்தை வைத்துக்கொள்ளுங்கள். அதிகப்படி தானியத்தைச் சர்க்காருக்கு விற்றுவிடுங்கள். கூட்டுறவுச்சங்கத்துக்கடனைத்தீர்த்துக்கொள்ளுங்கள். பாக்கி யிருக்கும் கந்தாயத்தைக் கட்டிவிடுங்கள்.

உங்களுக்கு என் சந்தேசம் இவ்வளவுதான் "இப்பொழுது சுயம் வியவசாயம் செய்யுங்கள். நீங்கள் அடகு வைத்த நிலங்களை மீட்டுக்கொள்ளுங்கள். உங்கள் கடனை ஒழித்துவிடுங்கள். வேண்டியபொழுது உதவுவதற்கு தர்பார் தயாராக விருக்கிறது. பள்ளிக்கூடங்களையும் ஆஸ்பத்திரிகளையும் பெருக்கும். மருத்துவச்சிகளை நியமிக்கும். உங்கள் ரஸ்தாக்களை அதிகப்படியாகக் செப்பனிடும். அணைக்கட்டுகளைக் கட்டுவிக்கும். ஜலவசதிகளை ஏற்படுத்தும். உங்களுக்கு இன்னும் அதிகப் பணம் உதவும். அதிகப்படி உரிமையையும் அளிக்கும்.






# நமது ஆங்கில இலக்கியம்

Indo Anglian Literature By Dr. K. R. Srinivasa Iyengar, M. A., The International Book House Ltd. Bombay. Price Rs. 2

மாணாக்க மொட்டுப் பருவத்திலிருந்து மலர்ந்த ஸமயம். இன்று பலவாண்டுகளுக்குமுன்; நானும் என் நண்பர் மஞ்சேரி ஸ்ரீ ஈச்வரனும், திருவல்லிக்கேணியில் ஒரு 'ரூம்' வைத்துக்கொண்டு 'பெடரேடட் இண்டியா' என்ற பத்திரிகையில் பல இலக்கிய ஆராய்ச்சிகளை எழுதிவரும் ஸ்ரீ கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்காரைப் பார்த்தோம். அன்றிருந்து அவருடைய உழைப்பை நான் இடைவிடாது கவனித்து வருகிறேன். அளவில்லாமல் எழுதிக்கொண்டே இருக்கிறார். ஆற்றலில் மேன்பட்டவர் பலரிருக்கலாம்; ஆனால் உழைப்பின்மையாலும் விடாமுயற்சி யில்லாததாலும் அவர்கள் ஒருவரும் நிலைக்கும்படியானதும், பயன்படுவதுமான வேலை செய்ய முடியவில்லை. "இண்டோ—ஆங்க்ளியன் லிடரேசர்" என்றது பம்பாயில் இந்திய இலக்கிய முன்னேற்றத்திற்காக ஸ்ரீமதி ஸோபியாவாடியா அவர்களின் ஊக்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவரும் "பி.இ.என்." என்ற எழுத்தாளரின் சங்கத்தின் சார்பில் ஸ்ரீ கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் எழுதிய அழகிய சிறு நூல். இதில் தெளிவாய் எழுதப்பட்ட 70 பக்கங்களின் மூலம் அவர் இந்தியாவில் ஆங்கிலக் கல்வி ஆரம்பம், முதன் முதலில் ஆங்கிலத்தில் தம் கற்பனைகளை எழுதவாரம்பித்த இந்தியக் கவிகள், இத்துறையில் புகழடைந்து உலகம் மெச்சும் இலக்கியங்களையும் கவிகளையும் ஆக்கிய சிலர், இன்னும் பற்பல ஆங்கிலப் பாக்களையும், சிறு கதைகளையும், பெருகதைகளையும், நாடகங்களையும் ஆராய்ச்சிகளையும், கட்டுரைகளையும் எழுதிவரும் மற்றவர், இவையெல்லாவற்றையும் பற்றிச் சுருக்கமாய் இந்நூலில் எழுதியிருக்கிறார். டோரு டட், ஸரோஜினிதேவி, ரவீந்த்ரநாத் டாகூர் இவர்களைப்பற்றியும், தென்னிந்தியாவில் ஸ்ரீ கா. சி. வேங்கடரமணி அவர்களைப்பற்றியும் ஸ்ரீ சங்கரராம் அவர்களைபற்றியும் விசேஷமாய் விரித்து எழுதியிருக்கிறார். எல்லோரையும் ஸ்தோத்திரமும் செய்துவிடவில்லை. பிறமொழியை அதுவும் கவிபாடும் துறையில், கையாளுவதிலுள்ள கஷ்டங்களைக் காண்பித்திருக்கிறார். இந்தியாவின் பலமாகாணத்தாய் மொழிகளின் இலக்கியங்களின் சுருக்கமான விளக்கம் என்ற தொடரில் இந்நூல் வந்திருப்பதால் இதில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அதிகம் சொல்ல முடியவில்லை. ஆதலால் இதே விஷயத்தைப்பற்றி அவர் பெரிய நூலொன்றைத் தயார்செய்து கொண்டிருக்கிறார். ஸ்ரீ அய்யங்காரின் நூல்களிலிருந்து நமக்கும் நம்முள் ஆங்கில இலக்கியத்தில் உழைத்துவருபவரின் வரலாறு தெரிகிறது; பேனட்டாருக்குப் அபல்லாடொன்றில், பிறபாஷையை ஆச்சரியமாய் தமக்கு உரியது போலவே ஆக்கிக்கொண்டு, அதிலேயே காவ்யம் செய்து வருவதும், அவ்வெழுத்தின் ரீதியும், விசேஷமும் என்னவென்றும் தெரியும். பண்டைகாலத்தில் எவரும் ஸம்ஸ்க்ருதம் கற்று, அதில் தம் வித்தை விந்தைகளைக் காட்டி வந்ததுபோல், நாம் தற்போது ஆங்கிலத்தைக் கையாண்டு வருகிறோம். ஆனால் இந்த பிறபாஷையிலேயே நாம் நம் பனுவாழ்க்கை முழுதும் எப்பொழுதும் நடத்திவருவோமா என்பது ஸந்தேகம்! தன் நூலின் முடிவில் ஹிந்தி, ஹிந்தி என்று நாடெங்கும் தேசிய இயக்கமிருந்தும், ஆங்கிலம் நழுவாது; அதை நழுவவிடவும் கூடாது என்கிறார் ஸ்ரீ அய்யங்கார். இது வருங்காலம் நிர்மாணிக்கவேண்டிய விஷயம். ஆராய்ச்சி

யும் கட்டுரையும் ஆங்கிலத்தில் இருந்து வரும், ஆனல் கவியும், நாடகமும், கதையும் ஆங்கிலத்தில் வருங்காலங்களி லும் எழுதப்பட்டுவரும் என்று நான் நினைக்கவில்லை.

இந்தியர் ஆங்கிலத்தில் எழுதுவதை மேனாட்டில் கல்லூரிகளில் ஆலங்காரிகர் களாய் விளங்கிவரும் ஆசிரியர்களும், அங்குள்ள அந்நாட்டுக்கவிகளும் பெரும் பாலும் மதிப்பதில்லை; இந்தியாவிலும் கல்லூரிகளில் ஆங்கிலப்பாடம் கற்பிப்ப வரும் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனல் சிற்சில இந்தியர் விஷயத்தில், டட், நாயுடு, டாகூர் இவர்கள்போன்ற வர் விஷயத்தில்மட்டும் அப்படிப்பட்ட அலக்ஷியமில்லை. மொத்தத்தில், முகவுரை யில் ஸர் ராமலிங்க ரெட்டி சொல்வது போல், இந்தியர் எழுதிய ஆங்கிலஇயக்க த்திற்கு முன்னிருந்ததற்கு இப்போது கௌரவம் அதிகரித்து வருகிறது.

நூலின் இறுதியில் நம் நாட்டில் இலக்கிய வளர்ச்சிக்காக ஸ்ரீமான் அய்யங்கார் சில அவச்யமான ஸௌகர் யங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார். அழகிய அச்சு, நல்ல பெருமனம் படைத்த ப்ரசுரக்காரர்கள், காலத்தில் மதிப்புரை எழுதும் பத்திரிகைகள், ஆசிரிய சங்கங்கள் முதலியவற்றைக் குறிப்பிடுகிறார். இவற்றில்விட்டுப்போன, அடிப்படையான முக்கிய அம்சம், பணத்தைக்கொடுத்து ஆவலுடன் வாங்கி வாசிக்கும் ஜனங்கள் (ரீடிங் பப்ளிக்) இந்த முக்கிய அம்சத்தை எப்படி நிச்சயமாய் ஏற்படுத்திக்கொள் ளலாம்! நாடுமுழுதுமே முன்னேற்ற மடைந்தால்தான் இது கைகூடும்.

பாஷை எதாய் இருந்தால் என்ன! இம் முயற்சிகளிலிருந்து தெரியவருவது என்னவென்றால், ஸர் ராமலிங்க ரெட்டி சொல்வதுபோல், தற்கால இந்திய— ஆங்கில இலக்கியம் வேதம் முதற் கொண்டு இருந்து பரிமளித்துவரும் இந் திய ப்ரதிபையின் ஒரு புது விலாஸமே.

—வே. ராகவன்

ஆரம்பக்ஷயம், ஆஸ்த்மா,
இருமல், ஈளை தீர

**லிங்க்யூர்**

ஒருமாத மருந்து ரூ. 5.

நாள்பட்ட வியாதிகளுக்கு
மகரத்வஜத்துடன் கலந்த

**லிங்க்யூர்**

ஒருமாத மருந்து ரூ. 10.

**SOLE AGENTS:-**
The Indian Industrial Co. Ltd.
363, Esplanade, Madras.

**STOCKISTS:-**

MADRAS
The United L. I. Ms.
Usman Road, T'Nagar.

MAYAVARAM
The United L. I. Ms.
The Premier Medical Hall.

TRICHY
The United L. I. Ms.
Andar St. Teppakulam.

MADURA
Meenakshi Medical Hall,
West Chitrai Street.

Sri Venkatesa Provision Stores,
Kuttalam, Tanjore Dt.

குறிப்பு:— தயாரிக்கும் முறை பாரதமணி சித்திரை மாத இதழ் பக்கம் 116 பார்க்கவும்.

# கட்டி

டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி

காலை எட்டுமணி. வைத்தியசாலையில் தினசரியைப் படித்துக்கொண்டிருந்த நான் 'ராமு' என்று யாரோ அழைத்துக் கொண்டே உள்ளே வந்ததைப் பார்த்தேன். வேறு யாருமில்லை; அடுத்த தெருக் காவேரிப் பாட்டிதான். அவள் பின்னே கமலாவும் வந்தாள். கமலா காவேரிப் பாட்டியின் அருமைப் பேத்தி. வயது இருபத்துநாலிருக்கும். இடுப்பில் ஒரு குழந்தை. அதன் கைகால்களெல்லாம் சோம்பிப்போய் தோஷம்பட்டாற்போல் மரப்பாய்ச்சி மாதிரியிருந்தது. பாவம், நடந்துவந்த களைப்பினால் கமலாவுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிற்று; மிகவும் சிரமப்பட்டாள். பாட்டிக்கு அவ்வளவு சிரமம் இருந்ததாகத் தெரியவில்லை. என்ன இருந்தாலும் பழைய காலத்து மனுஷியல்லவா? வயது அறுபதுக்கு மேலாகியும் இருபத்துநாலு வயதுக் குமரியைவிட திடமாகவேயிருந்தாள்.

"ராமு, இந்தக் குழந்தையைப்பாரேன்" என்று கூறிவிட்டுக் கமலாவிடமிருந்து குழந்தையை வாங்கப்போனாள் பாட்டி. அது 'வீர்' என்று கத்திற்று. அதன் முகத்தில் அசாத்தியச் சிடுசிடுப்பும் ஆயாசமும் நிரம்பியிருந்தது. நானே எழுந்து சென்று குழந்தையைப் பரீட்சித்தேன்.

"குழந்தைக்கு வயது எத்தனை ஆகிறது பாட்டி!"

"இருபது மாசமாகிறது. ஆனவயசுக்கு அடையாளமில்லாதே பொறந்ததே மொதக்கொண்டு இப்படியேதான் இருக்கு. இதுக்கு என்ன வியாதி; என்ன பண்ணலாம்; சித்தே சொல்லேன்"

"இது வரையிலே ஏதாவது வைத்யம் செய்திருக்கேளா? என்னென்ன செய்தேள்? சொல்லுங்கோ."

"இவ என் பேத்தி என்கிறதும் இவ புருஷனுக்குப் பட்டணத்துலே ஏதோ வியாபாரம்என்கிறதும் உனக்குத்தெரிஞ்சிருக்கும். சண்டைக்காக இவளையும் குழந்தையையும் இங்கே அனுப்பிவிட்டு அந்தப்பிள்ளையாண்டான் மாத்திரம் பட்டணத்திலே இருக்கான். அங்கே இருந்தபோது ஏதேதோ வைத்தியம் பார்த்தாளாம். போதுவிடிஞ்சா குழந்தையைத் தூக்கிண்டு ஆம்படையானும் பொண்டாட்டியுமா ஆள் இழுக்கிற வண்டியிலே உட்கார்ந்துண்டு ஜம்பமா டாக்டர் வீட்டுக்குப் போய்ட்டு வந்ததோட சரி. காரியத்திலே ஒண்ணுமில்லை. இங்கே வந்தத்துலேர்ந்து—ஏதோ என் மனஸுக்குப் பட்டுது ஏதாவது தோஷம் கீஷம் பட்டிருக்குமோன்னு — கோவில் கொளமெல்லாம் போய்ச்சுத்தியாறது. அதுலேயும் ஒண்ணும் பலனைக்காணும்."

"குழந்தைக்கு என்ன ஆகாரம் கொடுக்கிறேள்?"

"பசும் பால் தான்"

"தாய்ப் பால் கொடுக்கிறதேயில்லையோ!"

"அதேது? இந்தநாள் பெண்களுக்குத்தான் அது வழக்கமேயில்லையே! இருந்தான்னாக் கொடுக்கிறத்துக்கு? இப்போ பொறக்கற கொழந்தைகளுக்கு முக்கால் வாசியும் பசும் பால்தான் கதி-சிலபேர் என்னென்னமோ டப்பியெல்லாம் வாங்கிப்போட்ரு. பலதினுஸு போட்டப் படாதுன்னு ஆரம்ப முதல்

# அமிர்தாஞ்சன் லிமிடெட்,
## மதருஸ்.

| பொன்விழா ஞாபகார்த்த மாய் தங்கள் அன்பு மிக்க |  | ஆசி மொழி களை எங்களு க்கு அனுப்ப வேண்டு கின்ரேம். |
|---|---|---|



**அமிர்தாஞ்சன் லிமிடெட்,**
7. தம்புசெட்டித்தெரு, மதருஸ்.



தன் குடும்பத்தில் சம்பாதிக்கிறவர் **இந்த கனவான் ஒருவரே.** அவருக்கு நீண்ட ஆயுளும், நல்ல அதிருஷ்டமும் வரும்படி நாம் பிரார்த்திக்கிரேம். **ஆனல் காலம் மிகவும் நிச்சயமில்லாததாய் இருக்கிறது;** அதனல் அவருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்தால், அவருடையகுடும்பத்தை யார் சம்ரக்ஷிப்பது?

**" நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் "** தான்
**அதில் அவர் இன்ஷ்யூர் செய்திருந்தால்—**
**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,**
7, கவுன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

| ஸப் ஆபீஸ் : | மதருஸ் பிராஞ்சு : | ஸப் ஆபீஸ் : |
|---|---|---|
| 171, புதுத்தெரு, மதுரை. | 362, சைனாபஜார் ரோடு, எஸ்பிளனேட், மதருஸ். | 5, கெம்பகோட் ரோடு, பெங்களூர். |

பசும்பால் ஒண்ணேயேதான் போட்டிண்டு வரா கமலா. ஜலத்தை விட்டுக் காச்சி வச்சூடறது. குழந்தை அழறபோதெல்லாம் சக்கரையைப் போட்டு ஒரு பாலாடை போட்டறது. அதான்"

"மலப்ரவ்ருத்தி எப்படி ஆகிறது?"

"பொறந்தது முதல் வெளுப்பு வெளுப்பா ஒரு நாளேக்குப் பத்துத்தடவைக்கு மேலே போயிண்டிருந்ததாம். இப்போதான் கொஞ்ச நாளா கருப்பாப்போக ஆரம்பிச்சிருக்கு."

"குழந்தை அடிக்கடி மண்ணைத் தின்னுமோ?"

"மண்ணேயா? சிவசிவா! இப்போ சித்தே கீழே இறக்கிவிட்டாப்போரும். ஒரு புடி மண்ணே அள்ளி வாயிலே போட்டுண்டு குதப்பும்."

"அடிக்கடி பேதிக்குக் கொடுக்கிறதுண்டா?"

"நாலு நாளேக்கு ஒரு தரம் கொடுக்கறதுண்டு"

"என்ன கொடுக்கிற வழக்கம்?"

"பட்டணத்திலே அவா டாக்டர் ஏதோ ஒரு மாத்திரை எழுதிக்கொடுத்திருக்கார். அதைத்தான் வாங்கி வச்சிண்டு நாலுநாள் வட்டம் கொடுக்கறு"

"விளக்கெண்ணெயே போட்டுகிறதில்லையாக்கும்!"

"இல்லே. விளக்கெண்ணெய் போட்டினுல் கட்டி விழும், அப்படீன்னு டாக்டரெல்லாம் சொன்னுளாம்."

"சரிதான். ஆனல் ஒரு வைத்ய புஸ்தகத்திலேயும் அப்படி எழுதக் காணேம். இருக்கட்டும், அந்த டாக்டரெல்லாம் சொன்னபடி குழந்தைக்குத் தான் விளக்கெண்ணெய் போட்டவேயில்லேயே, நன்ருக இருக்கப்படாதா இது?"

"என்னமோ, அது வந்த வேளே!"

"இது எத்தனுவது குழந்தை?"

"நாலாவது. மூணும் கட்டி விழுந்து தான் செத்துப் போச்சு. எல்லாம் ரெண்டு வயசுக்குள்ளேயேதான்"

"பாட்டி, நீங்கள் பெரியவாள். அநுபவத்தில் என்னேவிட எவ்வளவோ மேம்பட்டவாள். நாலேந்து வருஷத்திற்கொருமுறை பிறக்கும் குழந்தைகள் எவ்வளவோ நன்ருயிருக்கு, கவனிச்சேளா?"

"ஆமாமாம். பேஷா! அதுக்காகத் தான் எங்க நாளிலேயெல்லாம் அடிக்கடி பிறந்தாத்துக்கு அழைச்சிண்டு போய் வச்சுண்டூற வழக்கம் இருந்துண்டு வந்தது. இப்போதான் அதில்லே. அரை நாள் கல்யாணம்; பிள்ளேக்கு இருபது வயஸு, பொண்ணுக்குக் பத்தொன்பது வயஸு. கல்யாணத் தன்னிக்கி மத்தியானமே புள்ளேயாண்டான் தான் இருக்கிற இடத்துக்குக் கூட்டிண்டு போயிடருன் பொண்டாட்டியை. நாள், கிழமை, கஷ்டம், சுகம் எல்லாத்துக்கும் அங்கேயே. பொண்ணரசி பொறந்தாத்துக்கு வரதே அபூர்வம். இப்படிப்பிரியாமெ இருந்தா பிறக்கிற குழந்தைகள் என்னத்துக்கு ஆகும்?"

பாட்டியின் பிரசங்கம் கமலாவின் பொறுமையை இழக்கச்செய்தது. ஆத்திரத்துடன் பேசினுள்.

"மெள்ள பாட்டி. என்னமோ ரொம்ப ரொம்ப அடுக்கிண்டு போறேளே, மூச்சு விடாமெ? நானும் போனுப்போறது போனுப்போறதுன்னு பொறுத்துண்டிருக்கிறேன். பிரும்மசாரியா இருந்தகாலத்திலே ஒட்டல்

சோத்தைத் தின்னுண்டு எப் போடாப்பா இந்தக்கஷ்டம் தீரும்னு இருந்தவா கல்யாணமான அப்பறமும் கஷ்டப்படுவானேன்னு அழைச்சிண்டு போரு புருஷாளா இருக்கறவா. இதுவும் ஒரு தப்பா? தூர தேசத்துலேருந்து அடிக்கடி பிறந்த விட்டுக்கு வரத்துக்கு எத்தனையோவித அசௌகர்யம். மனுஷ்ய ஸஹாயம், பணச்செலவு, சரீர நிலைமை எல்லாத்தையும் பத்தி யோசனை பண்ணறபோது அடிக்கடி வர முடியாமல் போயிடறது. இதுகூட ஒரு தப்பா? காலாகாலத்திலே கடவுளின் கட்டளைப் படி நடக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் மனுஷ்யாள் என்ன செய்ய முடியும்? அந்தக் காலத்திலே அப்படி நடந்தது இப்படி நடந்ததுன்னு இப்போ என்னமோ நடக்கத்தான் இல்லை. அதுவும் ஈசுவரன் செயல்தான்."

"பாட்டியைக் கோபித்துக் கொள்றதிலே பிரயோசனமில்லை. நிர்ப்பந்தவசமா, முன் காலத்தைப் போலே இருக்க முடியவில்லை என்றால் தன் சரீரத்தையாவது ஒழுங்காகப் போஷித்துக் கொள்ளவேணும். அது முடியல்லை என்றால் கேடு அவரவர்களுக்குத்தானே! தாய்ப்பாலில்லாத குழந்தை என்னத்துக்கு உருப்படும்? பால் இல்லையே என்றால் ஏதாவது வைத்தியம் செய்து கொள்ளவேண்டும்."

"என்ன வைத்யம் ராமு; சித்தே சொல்லேன்"

"குழந்தை பிறக்கிறதற்கு முன்னும் பின்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு உள்ளிப்பூண்டு சாப்பிடுகிற வழக்கமாச்சே பாட்டி, உங்களுக்குத் தெரியாததா?"

"பூ........ண்........டா........? நன்னாச் சொன்னையே, ஹும்! அது நாத்தமா நாறுமே! காப்பின்னாச் சொல்லு, ஒரு தடவைக்கு நாலுதடவைகூடச் சாப்பிடுவா".

"இருக்கட்டும் பாட்டி. அவா இஷ்டத்தையும் கெடுக்க வேண்டாம். காபி சாப்பிடுவதனாலேயே பிரமாத கெடுதல் ஒன்றுமில்லை. ஆனால் நடைமுதலில் சாப்பிடுவது போல் சாப்பிடக் கூடாது."

அவசர அவசரமாகக் கேட்டாள் கமலம்.

"பின்னே எப்படிச் சாப்பிட வேண்டும்? சொல்லுங்கோ. இனி மேலாவது அதன் பிரகாரம் சாப்பிடறேன்"

"காபி ஜலமாகத்தான் சாப்பிட வேண்டும். அப்போதைக்கப்போது 'டிக்காக்ஷன்' (Decochan) போட்டுக் கொள்ளவேண்டும். வெகு வீடுகளில் இதைக் கவனிப்பதேயில்லை. 'பில்டரி'ல் (Filter) காபித்தூளைப் போட்டுத் தண்ணீரை ஊற்றி வைத்து விடுகிறது. பாலைக்காய்ச்சி மூடிவைத்துவிடுகிறது. இரண்டும் ஆறி அவலமாயிருக்கும். அதைப்பற்றி அக்கரையில்லை. வேண்டிய போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து கலந்து சர்க்கரையைப் போட்டு மறுபடியும் சற்றுச் சுட வைத்துச் சாப்பிடுவது. இது ரொம்பப் பிசகான காரியம். எப்படி யென்றால் சாதாரணமாக நம் வீடுகளில் பாலை தங்கம், வெள்ளி, மண் முதலிய பாத்திரங்களில் வைப்பதில்லை. பித்தளை வெண்கலம் முதலிய பாத்திரங்களில் மணிக் கணக்கில் பாலை வைத்தால் களிம்பு பிடித்துக் கெட்டுப் போய்விடுகிறது. அந்தப் பாலை உபயோகிப்பதனால் பெரியவர்களுக்கே நாளடைவில் பசியைக் குறைத்து கொஞ்சம் கொஞ்சமாக உடம்பில் வலுவையே குறைத்துவிடுகிறது. இப்படியிருக்க அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பற்றிக் கேட்பானேன்? ஆகையினால் பழையபால் பழைய டிக்காக்ஷன் எல்லாம் விஷந்தான்."

"குழந்தைக்குக்கூட பழைய பால் போட்டப்படாதா?"

"கண்டிப்பாகப் போட்டவே கூடாது. குழந்தை அழும் போதெல்லாம் பாலைப் போட்டிப் போட்டிக் குழந்தைகளைக் கொன்றுவிடுகிறார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். பசுவின் பால் புதிதாகக் கிடைக்கும் போது போட்டி, மற்றையபோது தாய்ப்பால் தான் கொடுக்கவேண்டும்."

"பாட்டி, வைத்தியர் சொல்றது சரி தான். அநேக தடவை நானும் பார்த்திருக்கேன். சில நாளைக்கு மத்தியான வேளை, சாயங்கால வேளைகளில் காப்பி சாப்பிட்டதும் அரை மணிக்கெல்லாம் தலையை வலிக்கும், சுத்தும், வயிற்றைப் புரட்டும். ஒரு தரம் வாந்தியெடுத்தால் தான் உடம்பு சரியாக இருக்கும். இப்போதான் தெரிகிறது அது எதனால் என்று. ஆமாம், பூண்டு சாப்பிட்டால் நல்லது என்று சொன்னேளே, நாற்றமில்லாமல் சாப்பிட ஏதாவது வழியிருக்கோ?"

"வெகு சுலபமான வழியிருக்கு. அரைச்சேர் பாலுடன் அரைச்சேர் ஜலம் சேர்த்து அதில் இரண்டு பூண்டுப் பருப்பை நசுக்கிப்போட்டு கால்மணி கொதிக்கவைத்து ஆறின பிறகு அந்தப் பருப்பைத் தின்று பாலையும் குடித்துவிட வேண்டும். அப்படிச் சாப்பிடும் தாயின் பால் குழந்தைக்குச் சுலபமாக ஜீரணமாகும். குழந்தைகளுக்கு ஜீரணசக்தி சரியாக இருந்தால் வியாதியே வராது"

"பூண்டு சாப்பிட்டால், கட்டி வராதா?"

"அப்படியில்லை. அநேகமாக ஜீரண சக்திக் குறைவுதான் வியாதிகளுக்கு அஸ்திவாரம். முக்கானும் அதிக நாகரீகங் கொண்டாடுபவர்களின் குழந்தைகளுக்குத்தான் கட்டி முதலியன ஜாஸ்தியாக வருகிறது. அடிக்கடி பூண்டு உபயோகிக்கும் குடியானவர், முகம்மதியர், மற்றும் இதர ஜாதியினர் இவர்களின் குழந்தைகளுக்குக் கட்டி என்கிற வியாதி அபூர்வந்தான். அவர்களெல்லாம் விளக்கெண்ணெயும் தாராளமாக உபயோகிக்கிறார்கள். பூண்டும் எண்ணெயுமே குழந்தைகளைக் காப்பாற்றி வளர்க்கிறது என்பது என் அபிப்பிராயம்."

"டாக்டர்களில் சிலபேர் விளக்கெண்ணெய் கொடுக்கிறதே பிசகு என்கிறார்களே?"

"அவர்கள் குறிப்பிடும் எண்ணெய் வேறு, நான் சொல்லும் எண்ணெய் வேறு. பச்சையாக முத்துக்கொட்டையை நசுக்கி இயந்திர மூலம் எண்ணெய் பிழிந்தெடுப்பது ஒரு வழி; அதைத்தான் பச்சை எண்ணெய் என்பது. அதைச் சாப்பிட்டால்தான் நாளடைவில் உடம்பிற்குக் கெடுதலைத்தரும். அதாவது எண்ணெய் சாப்பிட்டால்தான் பிரவர்த்தியாகும் என்கிற நிலைமைக்குக் கொண்டுவந்துவிடுகிறது. ஆனால் நான் சொல்வது வேறு. இதைத்தான் 'புழுக்கின எண்ணெய்' 'ஊத்தின எண்ணெய்' என்பார்கள். இந்த எண்ணெய்க்கும் பச்சை எண்ணெய்க்கும் குணத்தில் அதிக வித்தியாசம் உண்டு.

புழுக்கின எண்ணெயைக் கொஞ்சம் பாலுடன் சேர்த்துக் குலுக்கி இரண்டு தினத்துக்கொருமுறை போட்டுவதனால் குழந்தைக்குதாராளமாக மலப்பிரவர்த்தி ஏற்படுவதோடல்லாமல் வேறு ஒரு வியாதியும் வராமல் 'காட்லீவர் ஆயில்' 'ஹாலிவரால்' முதலியன சாப்பிடுவதுபோல் ஒரு 'டானிக்'காக இருக்கும்.

சென்ற 10 வருஷங்களாக நான் இந்த இலவச ஆயுர்வேத வைத்திய சாலையில் சிகிச்சை யளித்து வருகிறேன். என் அநுபவம் சொல்லுகிறேன்.

கடுக்காய் ஒருபாகம், உள்ளிப்பூண்டு இரண்டு பாகம், திப்பிலி நான்கு பாகம், பவழுபஸ்பம் 15 பாகம் ஆகியவற்றை கடுக்காய்தோல் கழாயத்தால் கலந்து

அரைத்து ஒரு பெரிய பட்டாணி அளவுக்கு மாத்திரைகளாகச் செய்ய வேண்டும்.

குழந்தைகளுக்குத்தாய்ப்பால் கொடுக்கிற தாய்மார்கள் இந்த மாத்திரைகளை தினசரி படுக்குமுன் சாப்பிட்டால் குழந்தைகளுக்கு எவ்வித அஜீர்ணக் கோளாறும்வராது. இதைத்தாய்மார்கள் சாப்பிடுவதால் குழந்தைகளுக்கு கட்டி முதலியவை வாராமல் தடுத்துவிடலாம்.

**குறிப்பு:**– பவழ பஸ்பம் செய்யும் முறை, பவழம் கொடியாகவோ, அல்லது உடைந்ததோ எடுத்து எலுமிச்சம்பழ ரஸத்தில் சுத்திசெய்து, கத்தாழைச் சார் விட்டு அரைத்து, வில்லைதட்டி, 100 வரட்டியில் புடம் போடவேண்டும். புடம் ஆறினவுடன் மறுபடியும் அந்த வில்லைகளைக் கத்தாழைச்சார் விட்டு அரைத்து முன்போல் புடம் போட வேண்டும். இவ்விதம் ஏழுமுறை புடமிடச் சுத்த பஸ்பமாகும்.



# ஆமணக்கு

ராமனுத சர்மா

**இலை:—** மஞ்சள்காமாலை என்னும் வியாதியில் இதை உபயோகிப்பது உண்டு. காமாலையில் ஒருவிதமாகிய Obstructive Jaundice என்பதில்தான் இது உபயோகப்படும். காமாலைக்குப் பச்சிலை கொடுப்பது என்று சிலர் வழக்கமாக, ஒரு ஆமணக்கு இலையையும், கொஞ்சம் கருசாங்கண்ணி இலையையும், இரண்டு செடி கீழாநெல்லியையும் அரைத்து பாலுடன் கலக்கி 3-நாட்கள் கொடுக்கிறார்கள். இதனால் காமாலை குறைகிறது. பொதுவாக ஜனங்களுக்கு Obstructive Jaundiceதான் அதிகமாக வருவதால் இந்த வைத்தியம்—பச்சிலை கொடுப்பது என்பது-ஒருபேர் எடுத்துவிட்டது.

**வேர்:—** வேரை உபயோகிக்க மலபந்தம் தீரும். ஒரு விரல் நீளம் வேர் பொடியாகவோ, கஷாயமாகவோ சாப்பிட இரண்டுமுறைவெளிக்குப்போகும். ஆனால் தினந்தோறும் உபயோகிக்கக் கூடாது.

**எண்ணெய்:—** விளக்கெண்ணெய், வைத்தியத்தில் மிக உபயோகமானது. அது இருவகைப்படும். பச்சை, காய்ச்சினது. நமது நாட்டு வைத்தியத்தில் சொல்லியுள்ளகுணங்களெல்லாம்,காய்ச்சின எண்ணெய்க்குத்தான் இருக்கிறது. பச்சை எண்ணெய்க்கு அவைகள் இல்லை.

கொட்டை முத்துக்களை நன்றுகப் புழுக்கிக் காயவைத்து இடித்து, ஜலம் விட்டுக் கொதிக்க வைக்க எண்ணெய் மேலே மிதக்கும். இதைத்தான் காய்ச்சின எண்ணெய் என்பது. இதைச் சிறு குழந்தைகள் முதல் வயோதிகர்கள் வரையில் உபயோகிக்கலாம்.

விளக்கெண்ணெய் உபயோகத்தைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டு. அவைகளெல்லாம் பச்சை எண்ணெய்க்குத்தான்.

விளக்கெண்ணெயில் ஒருவிதமான (Bacteria) கிரிமிகளும் ஜீவிப்பது இல்லையாம். ஆகையால் சகலவித விரணங்களிலும், இதை உபயோகிக்க விரணங்கள் சீழ் பிடிக்காமல் சீக்கிரமாக ஆறிவரும். (Diphtheria) வினும் தொண்டையில் விளக்கெண்ணெய் தடவலாம். (Pyorrhea) வினும் பல்லீரலில் தடவலாம். பிரங்க வியாதியில் விளக்கெண்ணெயை உள்ளுக்கு உபயோகிக்க குணம் உண்டு.

சிறு குழந்தைகளுக்கு தாராளமாக விளக்கெண்ணெய் உபயோகிப்பது கண்டிருக்கிறோம். அந்த குழந்தைகளெல்லாம் வியாதி இல்லாமல் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் விளக்கெண்ணெய் கொடுத்தால் கெடுதல் என்று எண்ணெயே கொடுக்காமல் வளர்க்கப்படும் குழந்தைகளில் அநேகம் கட்டிவிழுந்தும், மற்றபடி உடம்பு வலுவு இல்லாமலும்தான் இருக்கின்றன.

நம் தேசத்திலுள்ளோர் சிலர் விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கிறார்கள். அது உடம்புக்கு அதிகக் குளுமையாம்.

கீல்வாயுவில் விளக்கெண்ணெய் மிக்க உபயோகமானது. மேலுக்கு தேய்க்கும் பிண்டதைலத்திலும், உள்ளுக்குச் சாப்பிடும் ராஸ்னாதி கஷாயத்திலும் விளக்கு எண்ணெய் சேர்க்க அதிக குணம் காணப்படுகிறது. இரவு படுக்கும் பொழுது உள்ளங்காலில் தடவ கண்ணுக்குக் குளுமை. உஷ்ணத்தினால் கண்ணெரிச்சலுண்டானால் ஒரு சொட்டு கண்களில்தடவ குளுமையாக இருக்கும். கணைச்சூட்டுக்காக விளக்கெண்ணெயும் பேயம்பழமும் குழந்தைகளுக்குக் கொடுப்பதைப் பார்த்து இருக்கலாம். சுருங்கச் சொல்லின் "குழந்தைகளை வளர்க்கும் விளக்கெண்ணெய்" என்று நமது வீட்டிலுள்ள பாட்டிகள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.